Registered as a News paper
பக்கங்கள் 10
விலை 07/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு
மக்கள் நாளிதழ்

Eezhanatham

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை 04 17.01.2005 திங்கட்கிழமை ஓசை 223

# மன்னாரில் படையினர் அட்டகாசம்

# கேணல் கிட்டு நிகழ்வில் கண்ணீர் புகை

## அரசியல்துறை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் புகார்


(நமது நிருபர்)

**மன்னாரில் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் நேற்றைய நினைவு நிகழ்வில் பங்கேற்க இருந்த தமிழர்கள் மீது சிங்கள இராணுவத்தினர் காடைத்தனமான தாக்குதலை நடத்தினர்.**

மன்னார் பேருந்து தரிப்பு நிலையம் பேசாலை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12வது ஆண்டு நினைவு நிகழ்வை குழப்பும் நடவடிக்கையில் சிறீலங்கா படையினர் ஈடுபட்டனர்.

மக்கள் நிகழ்வுகளில் பங்கே

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



## சர்வதேச நாடுகளிடம் உதவிகளை நேரடியாகக் கோரியிருக்கிறோம்.

### சு.ப.தமிழ்ச்செல்வன்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்



சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை, ஐ.நா அமைப்பின் உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேம்ஸ் மொறிஸ் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதற்காக ஜேம்ஸ் மொறிஸ் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்தார். நேற்றுகாலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பிற்குப்பின் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தார்.

**கேள்வி:** இன்றைய சந்திப்பு தொடர்பாக கூறுங்கள்?

**பதில்:** ஐ.நா அமைப்பின் ஒரு அங்கமான உலக உணவுத் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற வகையில் இன்றைய சந்திப்பு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



மட்டு அம்பாறை மாவட்டத்தில் பிரத்தியேக முகாம் ஒன்றில் நேற்று நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு காட்சிகள்.

## வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு நினைவு நிகழ்வு மட்டு, அம்பாறையிலும் அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

கடந்த 1993-01-16ம் திகதி இந்திய வல்லாதிக்கத்தின் சதியினால் வங்கக் கடலில் காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு, லெப் கேணல் குட்டிசிறி உட்பட 10 வேங்கைகளின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு போராளிகளினாலும், பொது மக்களாலும் தமிழீழமெங்கும் நேற்று நினைவு கூறப்பட்டது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் பிரத்தியேகமான படைத்துறை முகாம் ஒன்றில் உணர்வு பூர்வமாக கொண்டாடப்பட்டது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## அரசடித்தீவிலும் அஞ்சலி!

(எம்.யுவராஜ்)

வங்கக் கடலில் வீரகாவியமான லெப் கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 12வது நினைவு நாள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

மாவடி முன்மாரிக் கோட்டத்தில் அரசடித்தீவுக் கிராமத்தில்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## கல்லடி மணிக்கூட்டு கோபுர சந்தியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு கல்லடியில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

2ம் குறுக்கு பாரதி லேன் மட்டக்களப்பு எனும் முகவரியைச் சேர்ந்த பொன். சகாயராஜா (36) என்னும் குடுபஸ்த்தரே சுட்டுக் கொல்லப் பட்டவராவார்.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதயில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கருகாமையில் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளையிலே இனந் தெரியாத

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் அரசு மீது ஜே.வி.பி. முறுகல்!

(நமது நிருபர்)

ஜே.வி.பிக்கும் சந்திரிகாவின் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையில் மீண்டும் முறுகல் நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நேரடியாகவே ஜே.வி.பி விமர்சித்து வருகிறது. அரச நிர்வாகம் உரிய முறையில் இயங்கவில்லை என அந்த கட்சி குற்றம் சுமத்தி வருகிறது.

பல இடங்களில் ஜே.வி.பி தம்மை அரசாங்கத்தை சாராத தனியான கட்சியாக காட்டிக்கொண்டு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. அதேநேரம் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது, இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க காட்டிய இனவாதப் போக்கையடுத்தே இந்த முறுகல் நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்க இலத்திரனிய மற்றும் அச்சு ஊடகங்களில் ஜே.வி.பியின் பிரசாரங்களை குறைக்குமாறு ஜனாதிபதி தரப்பில் இருந்தே அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்பும் ஆயுதம் வாங்குவதற்கு அரசு உத்தேசம்

(நமது நிருபர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் நாடு பேரழிவைச் சந்தித்துள்ள இவ்வேளையில் ஆயுதக்கொள்வனவு மேற்கொள்வதற்கு சிறிலங்கா இராணுவத்தின் உயர்மட்டக்குழுவினர் ஈரானுக்குப் பயணமாகியுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஈரானுக்கு பயணம் மேற்கொண்ட போது இறுதியாக்கப்பட்ட பாதுகாப்பு பரிவர்த்தனத்தின் அடிப்படையில் தற்போது அந்நாட்டுக்குச் சென்றுள்ள சிறிலங்கா படைத்துறையினர் கொள்வனவு செய்யவேண்டிய ஆயுத தளபாடங்களைப் பார்வையிடுவர் என்று இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்த ஆயுத பரிவர்த்தனம் சுமார் சுமார் 15 கோடி அமெரிக்க

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# செய்தித் துளிகள்

## பெறுமதி மிக்க பொருட்கள் திருட்டு!

(நமது நிருபர்)

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட கிராமங்களில் பெறுமதி மிக்க பொருட்களை களவாடிய நபர்களை கல்முனைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை கல்முனை மாவட்ட நீதிபதி தட்சணாமூர்த்தி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவர்கள் அனைவரும் 4ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். பொலிசாருக்கு நீதிபதி கொடுத்த உத்தரவால் பொருட்களின் சொந்தக்காரர்கள் கிராம சேவகர் மூலம் பொருட்களை இனம் கண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## சடலங்கள் மீட்பு

(அ.நிசாந்தன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் சடலங்கள் கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டு ஆற்று நீருடன் இணைந்ததன் காரணமாக 21 சடலங்கள் வவுணதீவுப் பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளது என்றும் இந்தப் பகுதிகளில் தொடர்ந்து தேடுதல் நடைபெறுவதாகவும் அதிகாரியொருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

## விதவைகள் அதிகரிப்பு

(மருதமுனை நிருபர்)

சுனாமி அனர்த்தத்தினால் கல்முனைப் பிரதேச செயலகப் (முஸ்லிம் பிரிவு) பிரிவில் கணவன்மாரை இழந்த விதவைகளின் எண்ணிக்கை 2005.01.13ல் பெறப்பட்ட கணக்கின் படி 80ஐத் தாண்டியிருப்பதாக கல்முனைப் பிரதேச செயலாளர் ஏ.எச்.எம். அன்ஸார் தெரிவித்தார். தொகை மேலும் அதிகரிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதே வேளை மனைவிமாரை இழந்த தபுதாரர்களின் தொகையும் 100க்கும் மேல் இருக்குமென அறியமுடிகின்றது. இது தொடர்பான புள்ளி விபரங்கள் பெறப்பட்டு வருகின்றன.

## பிரான்ஸ் வைத்திய குழு திருமலையில் வெளியேற்றம்

(நமது நிருபர்)

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குச்சவெளி பிரதேசத்திற்கு சேவையாற்ற வந்த பிரான்ஸ் மெடிகவ்ஸ் சென்ஸ் புரண்ட் அமைப்பைச் சேர்ந்த 8 வைத்தியர்கள் அங்கிருந்து சேவையாற்ற முடியாதென மறுத்து திரும்பி விட்டனர். ஒரு மாத காலம் தங்கியிருந்து இப்பகுதியினருக்கு மருத்துவ சேவை வழங்குவதற்குத் தயாராக இவர்கள் திருகோணமலைக்கு வந்தனர். குச்சவெளி மருத்துவமனைக்குச் சென்ற இக்குழுவினர் வைத்தியசாலையைத் துப்பரவு செய்து ஏற்பாடுகளைச் செய்து வந்தனர். ஆனால் கடந்த புதன்கிழமை இப்பகுதிக்கு வந்த இந்திய இராணுவ மருத்துவக் குழுவினர் இதில் முகாம் அமைத்து மருத்துவ சேவை வழங்குகின்றனர். இவர்கள் இம்முகாமை விட்டு வெளியேறுவதற்கு இந்தியத் தூதுவரின் அனுமதி கிடைக்கவில்லை எனவும் அதுவரை தாங்கள் இங்கிருந்து சேவையாற்றுவோம் எனத் தெரிவித்தனர். இதனால் திருகோணமலை சுகாதார அதிகாரிகளுக்கு பலத்த அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன.

## கூட்டம் நடைபெற்றது

(நமது நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2005ம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இதனை முன்னிட்டு பல்கலைக் கழகத்தின் மாணவர் பேரவைப் பீட மாணவ உறுப்பினர்களுக்கான கூட்டம் வியாழனன்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பீடாதிபதிகளுக்கான கூட்டமும் நடைபெற்றது. இந்த இரண்டு கூட்டங்களும் ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றதாக உபவேந்தர் கலாநிதி ஏ.ஜி.குசைன்ஸ்மாயில் அறிவித்திருக்கின்றார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கை பிரிட்டிஸ் படைகள் புனரமைப்பு!



(நமது நிருபர்)

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணப் பிரதேசங்களில் கட்டட இடிபாடுகளை அகற்றுதல் மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பிரித்தானிய இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த 350 பேர் தற்போது அங்கு நிலை கொண்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரித்தானியப் படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவம் மற்றும் கடற்படையினர் கல்லடி மற்றும் நாவலடிப் பகுதிகளில் இந்த நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளார்கள்.

பிரித்தானியப் படைப் பிரிவைச் சேர்ந்த லெப்டினன்ட் கொமாண்டர் மோரல் தமது பணி தொடர்பாக எமக்குக் கருத்து தெரிவிக்கையில்,

ஒரு யுத்தக் கப்பல் உட்பட 2 கப்பல்களும் 3 ஹெலிக்கொப்டர்களும் இந்த நடவடிக்கைகளுக்காக கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், பிரான்சிலிருந்து மற்றுமொரு கப்பல் தங்களுக்கு உதவியாக அடுத்த ஓரிரு நாட்களுக்குள் வந்து சேரவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அந்தக் கப்பலில் மேலும் எத்தனை படை வீரர்கள் வருவார்கள் என்பது குறித்து எனக்குத் தெரியாது. அதுபோல் எவ்வளவு காலத்திற்கு நாங்கள் இந்தப் பிரதேசங்களில் தங்கியிருந்து பணியாற்றுவோம் என்பது குறித்தும் இதுவரை தெரியாது. இதனை இலங்கை மற்றும் பிரித்தானிய அரசாங்கங்களே தீர்மானிக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என இரண்டு பிரதேசங்கள் இருப்பது எமக்குத் தெரிந்த விடயம்.

தற்போது அரசாங்கக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பணியாற்றி வருகின்றோம். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் எமது பணி தேவை என்று கருதிக் கோரிக்கை விடுக்கப்பட்டால் அங்கு சென்று பணியாற்றுவதற்கும் தயாராக இருக்கின்றோம்.

எமது பணிகளுக்கு அமெரிக்கா, இந்தியா, கனடா போன்ற நாடுகள் தேவைகளுக்கு ஏற்ப ஒத்துழைப்பு வழங்குகின்றன.

குறிப்பாக அமெரிக்கா கனரக வாகனங்களையும் உபகரணங்களையும் எடுத்து வருவதற்கு அமெரிக்கா கப்பல்களை வழங்கி உதவியது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு முஸ்லிம் வர்த்தக சமூகம் உதவி!

(நமது நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களுக்கு மட்டக்களப்பு நகர முஸ்லிம் வர்த்தகர் சமூகம் நேற்று முன்தினம் ஒருதொகை நிதியை நிவாரணமாக வழங்கியது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து வாகரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த பணியில் ஒரு லட்சம் ரூபாய், உயிரிழப்புகள் ஏற்பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. கதிரவெளி, ஊரியன்கட்டு, கண்டலடி, வட்டுவான் ஆகிய இடங்களில் தஞ்சம் பெற்றுள்ள குடும்பங்களுக்கே உயிரிழந்தவர்களின் சமயச் சடங்குகளுக்காக இந்தத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. மட்டக்களப்பு நகர முஸ்லிம் வர்த்தகர் சமூகத்தின் இணைப்பாளர் கே..எல்.எம். கலீல் தமது இந்த நிவாரண உதவி தொடர்பாக கருத்து வெளியிடுகையில், ஏற்கனவே அரசாங்க கட்டுப்பாட்டு பகுதியிலுள்ளவர்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டது போல் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்குவதாகவும், மேலும் உதவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கும் கனடியப் பிரதமர் கட்டாயம் செல்ல வேண்டும்.

**கனடிய எதிர்க்கட்சி வேண்டுகோள்**

(நமது நிருபர்)

கனடியப் பிரதமர் போல் மார்ட்டின் அவர்கள் தென் கிழக்கு ஆசிய வட்டகைக்கான விஜயம் ஒன்றை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கும் செல்லுமாறு கனடிய எதிர்க் கட்சியான புளொக் கியூபெக் கட்சி அவரை வேண்டியுள்ளது.

கனடிய பாராளுமன்றத்தில் இரண்டாவது எதிர்க்கட்சியாக 53 ஆசனங்களுடனும், பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாநிலத்தின் தனிப்பெரும் கட்சியுமாகிய புளொக் கியூபெக் கட்சியே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது. சிறிலங்கா மற்றும் இந்தோனேசிய அரசுகளுடன் பேசி, அங்கு மோசமாக பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும், குறிப்பாக தமிழர் வதிகின்ற வடக்கிற்கும், இந்தோனேசியாவின் அச்சே பகுதிக்கும் செல்வதை உறுதிப்படுத்துமாறும், கியூபெக் மக்கள் உட்பட கனடிய மக்களின் மனிதாபிமான உதவிகள் பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் உரிய முறையில் செல்வதை நேரில் சென்று கண்டறியுமாறும் தனது வேண்டுதலில் அக்கட்சி மேலும் கனடிய பிரதமரை வேண்டியுள்ளது.

இதே வேளை கனடியப் பிரதமர் போல் மார்ட்டின் தலைமையிலான அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று கனடாவில் இருந்து இந்தோனேசியா பயணமாகியுள்ளது. இவர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கை சென்றடையவுள்ளனர். இன்று மாலை இங்கிருந்து புறப்பட்டு இக்குழு இந்தியா செல்கின்றது. இதேவேளை கனடிய தேசிய தொலைக்காட்சியான கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு செல்வதற்கு கனடிய பிரதமர் தலைமையிலான குழுவிற்கு சிறிலங்கா அரசு அனுமதி வழங்கவில்லை என்றொரு செய்தியை வெளியிட்டுள்ளது. எமது பிரதிநிதியாக செல்லும் கனடியப் பிரதமர், எமது உறவுகளை வடக்கு, கிழக்கிற்கு சென்று சந்தித்து ஆறுதல் கூறுவதுடன், அவர்களுக்கு முழுமையான உதவிகள் கிடைப்பதை கனடா உறுதி செய்யும் என்பதை அவர்களுக்கு நேரில் தெரிவித்தாலேயே இப் பயணத்திற்கான உரிய பலன் கிடைக்கும் என கனடிய தமிழ் அமைப்புக்கள் அவரிடம் நேரில் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. கனடா உட்பட பல்வேறு மேற்கத்திய நாடுகளிலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில், ஈழத்தமிழர்களே பெருமளவில் வாழ்கின்றனர் என்றும், அதனால் அவர்கள் நலன்களை முன்னிறுத்தி செயற்பட வேண்டிய கட்டாயம் பல மேற்கத்திய அரசுகளுக்கு ஏற்பட்டுள்ளதாகவும், ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# நோர்வே தூதுக்குழு கொழும்புக்கு விஜயம்

(நமது நிருபர்)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான நோர்வே குழுவொன்று எதிர்வரும் வியாழக்கிழமை 4 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வருகின்றது.

சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்டே எப்.ஜோன்சன், துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் சிறப்புப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும் இந்தக்குழுவில் இடம்பெற்றுள்ளார்கள். ஞாயிற்றுக்கிழமை வரை கொழும்பில் தங்கியிருக்க உத்தேசித்துள்ள நோர்வே குழுவினர் ஹம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட அழிவுகளையும், சேதங்களையும் பார்வையிடுவார்கள்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட அழிவுகளுக்கு நிவாரண உதவியாக 183 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளது. சர்வதேச முகவர் ஊடாகவும், உள்நாட்டு தொண்டர் அமைப்புகள் ஊடாகவும் இந்த நிதி நிவாரண மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

இதே வேளை கிளிநொச்சி செல்லும் நோர்வேப் பிரதிநிதிகளை தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்திப்பார் என ஏ.எப்.பி ஊடகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் என அதன் தலைவர் நேற்று அறிவித்துள்ளார்.

## சுவீடன் பிரதமரின் இலங்கைப் பயணம் ரத்து!

(நமது நிருபர்)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தீவகத்தை பார்வையிடுவதற்காகத் திட்ட மிட்டிருந்த பயணத்தை சுவீடன் பிரதமர் ஜோரன் பெர்சன் ரத்துச் செய்துள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய நாட்களில் அவர் இலங்கைத் தீவகப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். ஆசிய ஆழிப்பேரலையில் 52 சுவீடன் நாட்டவர் பலியாகியுள்ளனர். 893 பேர் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டு. மாவட்டத்தில் "சுனாமி"யால் 35 முச்சக்கர வண்டிகள் சேதம்

(அ.நிசாந்தன்)

அண்மையில் ஏற்பட்ட "சுனாமி" பேரலையினால் மட்டக்களப்பு மாவட்ட முச்சக்கர வண்டி ஊழியர்களும் கடும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முச்சக்கர வண்டி சங்கத்தில் 565 முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்பட்டும் 450 முச்சக்கர வண்டிகள் பதிவு செய்யப்படாமலும் சேவையில் ஈடு படுத்தப்படுகின்றன.

இவற்றில் 35 முச்சக்கர வண்டிகள் ஆழிப் பேரலையால் சேதமாக்கப்பட்டுள்ளதாக முச்சக்கர வண்டி சங்கத்தினர் தெரிவித்தனர்.



இதன் காரணமாக நூறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பலர் இறந்தும், பலர் காயமடைந்து உள்ளதாகவும் இவர்கள் இதுவரை கடமைக்குத் திரும்பவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# "சுனாமி"யால் பலியான கால் நடைகள் விபரம் திரட்டப்படுகின்றது

(அ.நிசாந்தன்)

"சுனாமி"யால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு காணாமல் போய், உயிரிழந்த கால் நடைகள் பற்றிய தகவல் திரட்டப்படுகின்றன. கால் நடைகள் அதிகளவாக விவசாயப் பிரதேசமான களுதாவளை, தேற்றாத்தீவை அண்டிய பகுதிகளிலே அதிகளவான கால் நடைகள் காணாமலும். இறந்தும் போயுள்ளதாக உரிமையாளர்கள் கவலை தெரிவித்திருந்தனர். இதனடிப்படையில் இது பற்றிய தரவுகள் திரட்டப்பட்டு வருவதாகவும் இவற்றுக்கான இழப்பீடுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட உள்ளதாகவும் இழப்பு ஏற்பட்டோர் தமது விபரங்களை கிராம சேவகரிடம் பதியுமாறு மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த தகவல்மையப் பேச்சாளர் ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

# மட்டு வந்த கருஜயசூரியா குழு பாதிப்புற்ற இடங்களை பார்வையிட்டனர்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி பிரதித் தலைவர் முன்னாள் அமைச்சர் கரு ஜயசூரிய தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை விஜயம் செய்து சுனாமியினால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களைச் சென்று நேரடியாகப் பார்வையிட்டனர்.

முன்னாள் அமைச்சர்களான பி.தயாரட்ண, ஏ.எச்.எம். அஸ்வர், கம்பளை நகரசபையின் தலைவர் சரத் காமினி ஹெட்டியார்ராட்சி, மட்டு. மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முகாமையாளர் வே. இராமநாதன், பிரதி முகாமையாளர் எம். லத்தீப்ஹாஜியார் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

இந்த உயர் மட்டக் குழுவினர் முதலில் மட்டக்களப்பு கல்முனை வீதியில் முற்றாகச் சேதமடைந்த ஓந்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு, பெரிய கல்லாறு பாலத்தை பார்வையிட்டதுடன், ஓந்தாச்சிமடம் அகதிமுகாம், களுவாஞ்சிகுடி அகதி முகாம், பட்டிருப்பு மகா வித்தியாலயம் ஆகியவற்றிற்குச் சென்று அங்கு அகதிகளைச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் மட்டு. மாவட்ட மண்முனைப்பற்று சிகரம் பாலமுனை, ஆரையம்பதி மகா வித்தியாலயம், ஆகியவற்றிற்கும், காத்தான்குடி கடற்கரை அன்வர் வித்தியாலயத்தில் உள்ள அகதிகளையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் கல்லடி, நாவலடி, திருச்செந்தூர் கிராமங்களுக்கும், மட்டக்களப்பு சென் மைக்கல் வித்தியாலயம், மத்திய கல்லூரி ஆகியவற்றிற்கும் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்புச் கச்சேரியில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டிலும் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் வே. சண்முகம் தலைமையில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி.தயாபரன், சமுர்த்தி மாவட்ட ஆணையாளர் இரா. நெடுஞ்செழியன், மட்டு. மாநகரசபை ஆணையாளர் வி.நவநீதன் உட்பட பல அரச திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்த மகாநாட்டில் உரையாற்றிய கருஜயசூரிய தமதுரையில் எதிர்க்கட்சியான எமது கட்சி சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும், பாதிப்புக்குள்ளான நாட்டை கட்டியெழுப்புவதற்கும் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்பட முன் வந்துள்ளது.

இதன் அடிப்படையில் எதிர் கட்சியும், இணைந்து ஜனாதிபதி நிறுவியுள்ள செயலணியின் சார்பாக பாதிக்கப்பட்ட மக்களையும், பாதிப்புக்குள்ளான பகுதியினையும் பார்வையிட்டேன். இங்கு பல்வேறு குறைபாடுகள் அகதி முகாம்களில் காணப்படுகின்றது. மீட்புப் பணிகள் மந்தக் கதியில் நடைபெறுவதை கண்ணுற்றேன்.

மீட்புப் பணிகளை தங்கு தடையின்றி நிறைவேற்ற கனரக வாகனம் தேவை, மற்றும் கூடாரங்கள் இல்லாமல் பாடசாலைகளில் முடங்கிக் கிடக்கின்றனர். இவை எல்லாவற்றையும் நேரில் பார்த்தேன். அரசாங்க அதிபரினால் கிடைக்கப்பெற்ற அறிக்கையும் பெற்றுள்ளேன். இங்குள்ள பரிதாபகரமான நிலைமையினை ஜனாதிபதிக்கு அறிக்கையாக சமர்பித்து எதிர்கட்சியான நான் உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வேன் என்பதையும் உறுதியாக தெரிவிக்கின்றேன் எனவும் கருஜயசூரிய தெரிவித்தார்.

இதனை அடுத்து ஏறாவூர் பற்று, பாசிக்குடா, வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஆகிய பிரதேசங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்தார்.

# தலதாமாளிகை தத்தெடுக்கிறது நூறு குழந்தைகளை

(நமது நிருபர்)

ஆழிப்பேரலையின் கொடூரத்திற்கு பல குழந்தைகள் தங்கள் உற்றார் உறவினர்களை இழந்து அனாதைகளாகி இருப்பதனால், அவ்வாறு பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து 100 குழந்தைகளை தத்தெடுப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்திருப்பதாக தலதா மாளிகை ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி தியவதன நிலமே நிரஞ்சன் விஜேயரட்ன கூறியதாவது: தத்தெடுத்தலுக்கான வழிமுறைகள் பற்றி மத்திய மாகாண அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வருகிறது.

இவ்வாறு தத்தெடுக்கும் குழந்தைகளின் அனைத்து செலவுகளையும் தலதா மாளிகையே பொறுப்பெடுக்கும் என்றார் அவர். இவ்வாறானதொரு மனிதாபிமானச் செயலை முன்னெடுக்க எந்தவொரு இந்து ஆலயமும் இதுவரை முன்வரவில்லை என்பது மிகவும் வருத்தமளிப்பதாகவே உள்ளது என்றார்.

# சுனாமியால் உயிரிழந்தோருக்கு சக்தி இல்லத்தில் பிரார்த்தனை

(தனஞ்ஷயன்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிர் இழந்தோரின் ஆத்மா இறையடிசேர வேண்டும் எனக் கோரும் மாபெரும் பிரார்த்தனை நிகழ்வு எதிர்வரும் 19ம் திகதி புதன்கிழமை முற்பகல் களுவாஞ்சிகுடி சக்தி இல்லத்தில் நடைபெறவுள்ளதாக மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற பேரவையின் தலைவர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார். இப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொள்ளவிரும்பும் சகல இன மக்களும் மேற்படி இடத்திற்கு வருகை தந்து தாங்கள் இப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் திருமலைக்கு சென்று பார்வை

(நமது நிருபர்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் "டடாஓ சினோ" (Tadao Chino) திருகோணமலைக்கு நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டார்.

காலை 10.50 மணியளவில் திருகோணமலை ஜயசுமணராமய விகாரைக்குச் சென்று அங்குள்ள பாதிக்கப்பட்ட சிங்கள மக்களையும், பின்னர் அலஸ்தோட்டம் ஏதிலியர் முகாமிற்குச் சென்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும், ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்குச் சென்று முஸ்லிம் மக்களையும் பார்வையிட்டார்.

இவர்களுடன் வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா, நிகொட்ட மாகாணப் பணிப்பாளர் அ.லங்காநேசன், பட்டணமம் சூழலும் பிரதேச செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், நிக்கொட் பிரதிப்பணிப்பாளர் ந.புகேந்திரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இதன் பின்னர் வடக்கு கிக்கு பிரதம செயலாளர் அலுவலகத்தில் நிக்கொட் அமைப்பினால் வழங்கப்பட்ட 2 உழவு இயந்திரங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் பிரதம செயலாளர் ரங்கராஜாவிடம் கையளித்தார்.

இவ் உழவு இயந்திரங்கள் சேருவல பிரதேச சபைக்கும், கிண்ணியாப் பிரதேச சபைக்கும் வழங்கப்படவுள்ளது.

இதன்பின்னர் மாநாட்டு மண்டபத்தில் அவர் பேசுகையில், தன்னுடைய பயணம் பற்றியும், ஆசிய அபிவிருத்தி வங்கி மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.அவர் மேலும் கூறியதாவது:

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாதிப்புக்குள்ளான மக்களின் வீட்டுத் தேவையினை ஆசிய அபிவிருத்தி வங்கி நிறைவு செய்யவுள்ளது. இம் மக்களின் புனர்வாழ்வுக்குத் தேவையான நிதி வசதிகளை நாங்கள் வழங்கவுள்ளோம் என்றார் அவர். இதனைத் தொடர்ந்து அவரது குழுவினர் மூதூர் பகுதிக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார்.

# திருமலையில் நிவாரணம் கோரி மக்கள் வீதியில் போராட்டம்

(நமது நிருபர்)

திருமலையில் "சுனாமி" யால் பாதிப்புற்ற மக்கள் அரச நிவாரண உதவிகள் கிடைப்பதில்லை எனக் கோரி சனிக்கிழமை வீதி மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்லத் தோட்ட மீனவக் கிராம மக்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதி ஓரங்களில் நூற்றுக் கணக்கான மக்கள் நடாத்திய இந்தப் போராட்டத்தை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்து வந்த பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகள் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன், உலர் உணவுப் பொருட்கள் மற்றும் உடுதுணிகள், கூடாரங்கள் வழங்குவதாகத் தெரிவித்தனர்.

# மட்டு. மாவட்ட அகதி முகாம்களில் நுளம்புகளின் தொல்லை அதிகரிப்பு

(அ.நிசாந்தன்)

"சுனாமி"யால் பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் பல முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் நுளம்புகளினால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அதாவது முகாம்களை அண்டியுள்ள நீர் செல்லும் கான்கள் ஒழுங்காகப் பாராமரிக்கப்படாததால் தற்போது வெள்ள நீர் வற்றத் தொடங்கியுள்ளதாலும் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. துர்நாற்றமும் அப்பிரதேசங்களில் வீசுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காத்தான்குடி, ஆரையம்பதி, களுதாவளை, களுவாஞ்சிகுடி, அகதி முகாம்களில் வாழ்கின்ற அகதிகளே இவ்வாறான சிரமத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பதுடன் தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இது பற்றிய நடவடிக்கைகளை உரியவர்கள் உடன் செய்ய வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தம்பிலுவில்லில் ஆணின் சடலம் மீட்பு

(நமது நிருபர்)

"சுனாமி" அனர்த்தத்தால் உயிரிழந்த ஒரு ஆணின் சடலம் நேற்று தம்பிலுவில்லில் தமிழர் புனர் வாழ்வுக் கழக தொண்டர்களால் மீட்கப்பட்டது. தம்பிலுவில் களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள தண்ணீரில் காணப்பட்ட இந்தச் சடலம் அடையாளம் காண இயலாதவாறு அழுகிய நிலையில் காணப்பட்டதாகவும் சுமார் பதினைந்து வயது இருக்குமெனவும் தெரிவித்தனர்.

# வீடுகளை இழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும்

(மகேசன்)

"சுனாமி" அனர்த்தம் காரணமாக சுமார் 75 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் அழிந்துள்ளன.

இவ்விழப்புக்கு நஷ்ட ஈடுகள் வழங்கப்படவுள்ளதாக வீடமைப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

வீடுகள் புதிதாக நிர்மாணிக்கையில் கடலில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால் அனுமதி அளிக்கப்படும்.

இருப்பினும் வட-கிழக்கில் இத்தூரம் 200 மீற்றராக இருக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கம் உதயம்

(சர்வேஸ்வரன்)

அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இவ் அமைப்பின் தலைவராக வி.ரி.சகாதேவராஜா, செயலாளராக சரவணன், பொருளாளராக வேல்ராஜ், உப தலைவராக சுரேஸ், உபசெயலாளராக துசியந்தன் ஆகியோரும் போசகர்களாக சிரேஸ்ட விரிவுரையாளர்கள், தர்மலிங்கம், சிவப்பிரகாசம், குணராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டடஓ சினோ வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜாவிடம் உழவு இயந்திரங்களுக்கான சாவிகளைக் கையளிப்பதையும், அருகில் நிக்கோட் திட்டப்பணிப்பாளர் லங்காநேசன் நிற்பதை முதலாவது படத்திலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் உழவு இயந்திரத்தில் அமர்ந்திருப்பதை மற்றைய படத்திலும் காணலாம். (எஸ்.எஸ்.குமார்)

## வடக்கு கிழக்கில் அவசரகால சட்ட பிரகடனம் தமிழ் மக்களுக்கான நிவாரண உதவி பறிபோகும்

### மலையக மக்கள் முன்னணியின் தலைவர் குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தி இருப்பது வடக்குக் கிழக்குச் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு தன்னிச்சையாக உதவி வழங்குபவர்களைக் கட்டுப்படுத்துவதாக அமையுமென மலையக மக்கள் முன்னணி யின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இது பற்றி கூறுகையில் நாட்டு மக்கள் அனைவரும் மனிதாபிமான சிந்தனையோடு பாதிக்கப்பட்டுள்ள சகலருக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்ற சிந்தனை மேலோங்கி வருகின்றதற்கு அவசியம் ஏன் ஏற்பட்டது என்பது ஆச்சரியத்தையே ஏற்படுத்தியுள்ளது.

அரசினால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் தென்பகுதியில் கூடக் கட்சி பாரபட்சத்திலையே நடத்த ப்படுவதாக விமர்சிக்கப்படுகின்ற இந்த நிலையில் வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசங்களுக்கு அரசின் நிவாரண உதவிகள் வந்து கிடைக்கவில்லை என்பது முக்கியமா னதொரு குற்றச்சாட்டாகும்.

அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு உதவி வழங்க முற்படும் போது அரச படைகளாலும், அரச பிரதிநிதிகளாலும் பல கெடுபிடிகளைச் சந்திக்க நேரிடுகின்றது என்பது ஏற்கனவே ஊடகங்கள் மூலம் வெளிக்கொணரப்பட்டிருக்கிறது. இந்தக் கெடுபிடிகள் மேலும் அதிகரிக்கப் படுவதாகவே இந்த அவசர காலத் தடைச்சட்டம் அமையும் என்பதே எல்லோருடைய கருத்தாகும். இந்த இக்கட்டான நேரத்தில் எந்தத் தடையுமின்றி நிவாரண உதவிகளை வழங்குவதற்குச் சாத்தியமான சகல வாய்ப்பையும் ஏற்படுத்துவதற்கு இந்தச் சட்டம் தடையாக இருக்கின்றது.

பாதிக்கப்பட்டுள்ள வட கிழக்கு தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் விஜயம் செய்வதைத் திட்டமிட்டு தடுக்கின்ற இந்த நிலையில் உள்நாட்டில் உள்ளவர்கள் கூட இந்தப் பிரதேசத்திற்கு போவதற்கு வாய்ப்பு அதிகமாகவுள்ளது. இதனால் பாதிப்படைந்த போது சிறுபான்மை மக்களே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறு வகையில் பாதிப்பை ஏற்படாமல் தவிர்ப்பதற்கு நடைமுறையிலுள்ள சாதாரண சட்டங்களே போதுமானவையாகும். எனவே உடனடியாக அவசர காலச்சட்டத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதே மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும். இது விடயத்தில் வடக்கு கிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, பாராளுமன்றத்தின் பிரதிநிதிகளாகவுள்ள அனைத்து சிறுபான்மையின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் தெரிவித்தார்.

## பிரஜா பிதா பிரமாவின் நினைவு தின அனுஷ்டிப்பு

(நமர் நிருபர்)

பிரம குமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக் கழகத்தின் ஸ்தாபகத் தந்தையாகிய பிரஜா பிதா பிரமாவின் 36வது நினைவு தினம் எதிர்வரும் 18ம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது. இதனை முன்னிட்டு நேற்றுக் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபத்தில் கண்காட்சியொன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு "நாளை கண்ட மனிதர்" எனும் தலைப்பில் விரிவுரையும், உலக அமைதிக்கான தியானமும் இடம்பெற்றது.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு சூறாவளி அச்சம் தொடர்கின்றது

(இ.மகேசன்)

சுனாமி பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் படிப்படியாகச் சொந்த இடங்களுக்குச் செல்ல அதிகாரிகள் பணிக்கின்ற போதிலும் வாழக்கூடிய வசதியான இருப்பிடமின்மை மற்றும் சூறாவளி அச்சம் போன்றவற்றால் நலன்புரி நிலையங்களை விட்டு வெளியேற முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பாடசாலைகளை மூடி பாடசாலைகளை இயங்க வைக்க அதிகாரிகள் முயற்சிக்கின்ற போதிலும் தங்கியிருக்கும் மக்களுக்கு திருப்தியான மாற்று ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படுவதுடன் உளவியல் ரீதியான பாதிப்புக்களுக்கான பரிகாரங்களை வழங்க வேண்டியதும் அவசியமானதாக இருப்பதை பாதிக்கப்பட்ட மக்களுடன் உரையாடும் போது விளங்கிக் கொள்ள முடிகின்றது.

## சேதமடைந்த பாலங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புனரமைப்பு

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட களுவன்கேணி மீனவர் கிராமத்தில் முற்றாகச் சேதமாக்கப்பட்ட பாலதாம் போதியை மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தீவிரமாக புனரமைத்து வருகின்றது.

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள இரு பொறியியளார்களைக் கொண்டு இந்தப்பால அமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றது.

பெரும்பாலும் இன்னும் ஒரு சில வாரத்திற்குள் இவ்வேலைகள் முடிவுறும் என தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கே. தேவராஜன் தெரிவித்தார்.

கொழும்பு டீ பக்கா இயந்திரக் கம்பனி இதற்கான இயந்திர உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களையும், மக்களையும், இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் பார்வையிடுவதையும் மக்களுடன் உரையாடுவதையும் படத்தில் காண்க.

## இரத்தினக் கற்கள் கடத்த முயன்ற இருவர் கைது

(நமது நிருபர்)

சட்ட விரோதமாக 23 லட்சம் பெறுமதியான இரத்தினக் கற்களை பாதணிக்குள் மறைத்து வைத்துக் கொண்டு நாட்டுக்குள் கடத்த முயன்ற இரண்டு வர்த்தகர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## யாழ் பல்கலைக்கழக வைத்தியக்குழு வைத்திய சிகிச்சை வழங்குகிறது

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு டிசம்பர் 29ம் திகதி தொடக்கம் இற்றைவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பீடத்திலிருந்து டாக்டர் வித்தியானந்தன், யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களினாலும் நடமாடும் வைத்திய சேவைகள் சகல முகாம்களிலும் நாள்தோறும் மட்டக்களப்புத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் திருப்தியான முறையில் நடைபெற்று வருகின்றது. மேற்படி வைத்தியக் குழுவுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக டாக்டர் சச்சிதானந்தன், டாக்டர் பரமேஸ் ஆகியோர்களும் இணைந்து வைத்திய சேவையை மேற்கொண்டு வருவதுடன் வேறு வைத்திய குழுக்கள் வந்து சிகிச்சையளிக்கும் போது அவர்கள் எந்த நோயினால் நோயாளி பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான அடையாளம் காணும் அட்டைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அம்பாறை மாவட்ட கடற்றொழில் துறைக்கு கோடிக்கணக்கில்நஷ்டம்

(அக்கரைப்பற்று நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் அம்பாறை மாவட்ட கடற்றொழில் துறைக்கு 81 கோடியே 85 லட்சத்து 50 ஆயிரம் ரூபா இழப்பு இதுவரை பெற்ற மதிப்பீடுகளிலிருந்து பெறப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்தியக் கடற்றொழில் துறை உதவிப் பணிப்பாளர் எஸ்.பி. ஜோர்ஜ் தெரிவித்தார்.

16500 க்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளதாகவும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களின் வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார். 1500க்கும் மேற்பட்ட மீன்பிடிகலன்கள், இயந்திர உபகரணங்கள், 60 கிலோமீற்றர் நீளமான மீன்பிடிப் பாதைகள், மீன்பிடிக் காரியாலயக் கட்டிடங்கள் என்பன அழிந்து போயுள்ளதாகவும் மேலும் ஐஸ் தொழிற்சாலை சனசமூக மண்டபங்கள், மாதிரி வீடமைப்புகள், மீனவர் வழிகாட்டி விளக்குகள் என்பன சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதில் தாயகப் பிரதேசம் புறக்கணிப்பு நிலை

(இ.மகேசன்)

சுனாமிப் பேரலையின் தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையின் தென் பகுதி மிகவும் வேகமாக மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்களின் தாயகமான வடக்குக் கிழக்குப் பிரதேசத்தை கட்டியெழுப்புவது பற்றிய கரிசனை குறை வாகவே காணப்படுகின்றது.

தென்பகுதி மாவட்டங்களான அம்பாந்தோட்டை, காலி போன்ற மாவட்டங்களில் பாலங்களை அமைத்தல், பாதைகளை அமைத்தல்,

மக்களின் வீட்டுத்திட்டங்கள் போன்ற பல வேலைகளும் கடுகதி வேகத்தில் இடம் பெற்று வருகின்ற அதே நேரம் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் இன்னும் மீட்புப் பணிகளும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையிலும் பல்வேறு சிரமங்களுடன் மந்தகதியில் வேலைகள் இடம் பெற்றுவருகின்றன.

அத்துடன் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலரும் தென்பகுதிக்கே அழைத்துச் செல்லப்பட்டு நிதியுதவிகள் கோரப்படுகின்றமை கடந்த காலங்களில் அரசு மேற்கொண்ட தமிழர், சிங்களவர் என்ற பாரபட்ச நிலை தொடருவதையே எடுத்துக் காட்டுகின்றது.

## அம்பாறை மாவட்டத்தில் முப்பதாயிரம் ஏக்கர் நெல் வயல்கள் முற்றாகச் சேதம்

(அக்கரைப்பற்று நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட இயற்கை சுனாமி பேரலையிலும் அதனையடுத்து அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினாலும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நெல் வயல்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாக மாவட்ட விவசாய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை இப்பாதிப்பு தொடர்பாக நேரடியாகச் சென்று பார்வையிடுவதுடன் இதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு காணி நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தி பிரதி அமைச்சர் விமல் ரட்நாயக்க கடந்த வெள்ளிக்கிழமை தனது குழுவினருடன் வந்து அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாயல் கலாசார மண்டபத்தில் விவசாயிகளைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து பேசும் போது அம்பாறை மாவட்டத்தில் சுனாமியினாலும், வெள்ளத்தினாலும் முற்றாகச் சேதமடைந்துள்ள கமநல சேவை மத்திய நிலையங்களுக்கூடாக எமது குழுவினர் பாதிப்புப்பற்றிய இறுதி மதிப்பீடு செய்ததும், நஷ்ட ஈட்டுக்கொடுப்பனவு வழங்க முடியுமெனவும் பாதிக்கப்பட்ட வாய்கால்கள், பாதைகள், அடுத்த போகத்திற்குள் சகலவற்றையும் புனரமைத்துத் தருவோம் எனவும் தெரிவித்தார். விவசாயிகளைப் பாதிக்கக் கூடிய எந்த விடயத்தையும் செய்ய மாட்டோமென தெரிவித்தார். அதாவது அரிசி இறக்குமதியை டிசம்பர் 2004. 31ம் திகதி நிறுத்தியுள்ளோம். பசளை விலையை கூட்டமாட்டோம் எனவும் தெரிவித்தார்.

# தளபதி கிட்டு: ஒரு காலத்தின் பதிவு

**தீருவில். கடலென மக்கள். இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அடித்து வருத்திய பழைய நினைவைச் சொல்லிக் கொண்டு நிற்கும் பன்னிருவரின் நினைவுக் கோயிலைச் சுற்றியும், நிரவியும் மக்கள்.**

நெஞ்சங்களில் கோபம், அழுகை, கண்ணீர். சோகத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் எழுந்த சினம். அன்புக்குரியவனை இழந்து விட்ட தவிர்ப்பு.

இதயத்தில் விழுந்து விட்ட இரண்டாவது அடி. அதே தீருவில்.

கிட்டண்ணையும், அவர் தோழர்களும் கப்பலில்....படமாக....நம்பமுடியாத நிஜம்.

படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை. தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.

அம்மா தன் இளையமகனின் இழப்பைத் தாங்க முடியாமல், மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலைவரும் மகன்தான். தேசம் அழுதது.

மக்கள் கூட்டம், தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்துக் கை அசைத்தது. உறுதியான அசைவு. கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை.

"தலைவன் இருக்கிறான்" கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு. சுதுமலை அம்மன் கோயில் முன்றலில் இலட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி.

தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளிற்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

"அடுத்ததாக தளபதி கிட்டு அவர்கள் பேசுவார்!" மக்களின் ஆரவாரம். ஆர்ப்பரிப்பு.

அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம். தங்கள் தளபதியில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு, உற்சாகம். அந்த ஆர்ப்பரிப்பிற்குள் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது. அப்படியே பதிந்தது.

"தலைவர் இருக்கிறார். அவரை நம்புங்கள்". ஒரு தூய உள்ளத்திலிருந்து வந்த சத்தியமான வார்த்தைகள் இன்றும் கூட அந்த வார்த்தைகளுக்குத் தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கிறது!

கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடு கட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல.

தங்களுக்காக சாவுக்கு முன்னால் நிற்கும் வீரன் ஒருவனை நேசிக்க, எவருக்குமே காரணங்கள் தேவையில்லை.

கிட்டண்ணை சிறந்ததொரு போராளி. வீரன். அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல்...... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர். விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது.

மக்கள் பயந்து நடுங்கி உறக்க மற்று விழித்த காலம், வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப் போனது, கிட்டண்ணையின் காலத்தில் தான்.

"கோட்டையில இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம், அவசரமாக மேற்சட்டையைக்கூட ஒழுங்காக அணியாமல், கிட்டண்ணை அங்கு நிற்பார்.

'கிட்டு நிற்கிறார்: இனிப் பயமில்லை'. மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக் களிப்பு. மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும், அங்கு கிட்டண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ்வொரு நாளும் சண்டை.

அந்தக் காலங்களில்தான், கிட்டண்ணை மக்களின் மனங்களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான, அழிவற்ற வாழ்வு: கோபித்தாலும், சண்டையிட்டாலும் சாகாத வாழ்வு.

வீதிகளின் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அருகில், விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தபடி, கிட்டண்ணை நாட்டு நடப்புகளைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழவர்களுக்கோ தாராளமாக நேரமிருந்தது. கிட்டண்ணைக்கோ அப்படி இல்லை. ஆனாலும் அந்த மாலை நேரங்களை அவர் விரும்பினார்.

அந்த முதியவர்களின் நிலையோ சொல்லத் தேவை இல்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால்.... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள்.

வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெற்றுடம்பில் இழுத்து முறியப்பட்ட காற்சட்டைகளுடன் 'சிறிய கிட்டுகள்' நிற்பார்கள். இடுப்பில் கிட்டண்ணையின் '375 மக்னம்' சுழற் துப்பாக்கியைப் போன்று இழுபட்டபடி, வளைந்த தடி ஒன்று தொங்கும்.

கள்ளன்-பொலிஸ் விளையாட்டெல்லாம் மறைந்து, புலிகள்- இராணுவ விளையாட்டுத் தொடங்கி இருந்தது.

## பிரபாகரனின் பெருந்தளபதி

விளையாட்டிலும் 'சின்னக் கிட்டுகள்' ஒரு நாளும் தோற்பதில்லை. வெற்றி: என்றும் வெற்றிதான். விளையாட்டில் கூட கிட்டு மாமா தோற்பதை, அவர்கள் விரும்புவதில்லை.

இப்படித்தான் கிட்டண்ணை எல்லாரின் நெஞ்சங்களிலும் வாழ்ந்தார். அதனால்தான் அவருக்கு ஆபத்து என்ற போது மக்கள் துடித்தனர்.

அது 1987 இல் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத்தினருடன் நடந்த சண்டை ஒன்றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகி, சில நாட்கள் சென்றிருந்தன.

அப்போதுதான், தேசவிரோதிகளால் கிட்டண்ணைக்குக் குண்டெறியப்பட்டது.

குண்டு வெடித்தது தெரியும். ஆனால் கிட்டண்ணைக்கு என்ன நடந்ததென்பது மக்களுக்குச் சரியாகத் தெரியாது.

தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது.

மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார்கள். தமிழ் நிலம் எங்கும் கவலையில் தவிர்த்தது.

உயிருக்கு ஆபத்தில்லையாம் என்ற பொழுது, ஓரளவு ஆறுதலாக இருந்தது. ஆனாலும் கவலை முற்றாகத் தீரவில்லை. ஏனெனில் கிட்டண்ணை ஒரு காலை இழந்திருந்தார்.



1987, மே நாள், மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர்.


"கிட்டண்ணை பேசுவதற்கு வருகிறாராம்." மக்கள் முகங்களில் மகிழ்ச்சி: கிட்டண்ணையைப் பார்த்து விட வேண்டும் என்ற ஆவல்.

கிட்டண்ணை பேசினார். தரமான தொரு பேச்சாளனுக்குரிய பேச்சு. அது மக்களின் பங்களிப்புக்குரிய பாராட்டு. ஒன்றிணைந்த மக்களை வாழ்த்திய பேச்சு.

அன்று மக்களிடையே உற்சாகமும், மகிழ்ச்சியும், கண்ணீரும் கரைபுரண்டு ஓடியது.

கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித்தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக் கொள்ளும் கோபம். மறுகணம் எங்கென்று தெரியாது. மறைந்து விடும் கோபம்.

தோழர்களுக்கு அடியும் விழும். ஆனாலும் ஒருவரும் கோபிப்பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதும் இல்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள்ளிருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.



சண்டைகளின் பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும் யாராவதொரு தோழனை இழந்து விட்டால் முகம் கறுத்துத் தவிர்த்து அழும் அழுகையையும், அவர்கள் கண்டவர்கள்: அதனால்தான் கிட்டண்ணையில் யாரும் கோபிப்பதில்லை. அவரின் கோபம் தேவையானது. இயக்கத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசியமானது.

கோபத்தைவிட அவரின் உள்ளே இருந்த கனிவும், திறமையும் மனிதர்களை வென்றன.

குறிபாத்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். இலக்கு பொதுவாகத் தவறுவதில்லை. அது அவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்கள்ஊரில் பெரியவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் பெருமை.

ஆபத்தான வேளைகளில்கூட பதற்றமற்று, நிதானமாகத் துப்பாக்கியைக் கையாள்வார். சண்டைகளின் போது தேவையற்ற துப்பாக்கி இயக்குவதை அவர் ஒரு போதும் செய்ததில்லை.

இதெல்லாவற்றிற்கும் அவருடைய முதலாவது தாக்குதலே சான்றாக நிற்கிறது.

உமையாள்புரம். நிலக்கண்ணிகளைப் பொருத்திவிட்டு, இராணுவத்தினரின் வருகைக்காக அவர்கள் பத்துப் பேர் காத்திருந்தார்கள். எல்லாம் சரி. இராணுவ வண்டிகள் வருவது தெரிந்தது.

கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாத காலம். இராணுவ வண்டிகளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிகள் வெடித்தன.

புலிகள் வெவ்வேறு திசைகளால் பின்வாங்கினார்கள். அல்லது தப்பி ஓடினார்கள்.

வீதிக்கு அருகாக தண்டவாளம் இருந்தது. அதன் இரு பக்கமும் வெட்டை.

கவசவாகனங்கள் இரண்டு, துப்பாக்கி ரவைகளை அள்ளி வீசிக் கொண்டு நெருங்கி வந்தன.

ஒரு சிலர் விழலாம் என்ற நிலை. கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று திரும்பி, தனது ஜி.3 துப்பாக்கியால் கவசவாகனத்தை நோக்கிச் சுட்டார்.

தவறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காயப்பட்டான். அவ்வாகனம் துரத்தி வந்த வேகத்திற்கு சரிந்து புரண்டது.

அவரது முதலாவது களமும் சாதனைதான்.

அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்வொரு களமும் அவரது வீரத்தை வெளிப்படுத்தி நின்றது. பகைவர்களைக் கலங்கடித்தது.

கிட்டண்ணை சிறந்ததொரு வீரன். அதைப் போன்று தான், கமராவைத் தூக்கினால் சிறந்ததொரு படப்பிடிப்பாளன். அது தொலைக் காட்சிக் கமறாவாக இருந்தாலும் சரி...

சிறந்ததொரு இலக்கியவாதி எழுத்தாளன். போரளிகள் தொடர்பாக போர்முனையில் அவர்களின் வாழ்க்கை தொடர்பாக உள்ளத்தைத் தொட்டு விடும் உணர்வோடு அவரின் எழுத்துக்கள் வெளிப்படும்.

போராட்ட வாழ்வின் தத்துவமும், நிதர்சன தரிசனமும் அவர் எழுத்துக்களில் பரவிவிழும். எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் உயிர் போன்ற மக்கள் மீதான நேசம், அவர் எழுத்துகளில் பரிணமிக்கும்.

சரி, இதெல்லாம் போக கிட்டண்ணையை நாங்கள் இழந்துதான் போனோமா? உண்மைதான். ஏற்றுக் கொள்ள முடியாத தெளிவான உண்மை.

"நாம், ஏராளமான மரணத்தைக் கண்டு விட்டோம். தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரீட்சயமானது. சாவைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று தான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்த போது எம்மை இதயம் உருக்குலைத்து, தளர்ந்து..... எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்?" மேஜர் அல்பேட்டின் இழப்பை அடுத்து அவரைப் பற்றிய நினைவுக் குறிப்பில் கிட்டண்ணை இதை எழுதினார்.

நாங்கள்கூட, ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம். கிட்டண்ணை இதை எழுதுகையில் எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று, ஆயிரக் கணக்கான தோழர்களை நாம் இழந்து விட்டோம். எங்கள் இதயங்கள் பலமுறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட எம்மால் இழப்புக்களைத் தாங்க முடிவதில்லையே! அதிலும் கிட்டண்ணையை....!

'கிட்டண்ணையும் அவர் தோழர்களும் வந்த கப்பலை இந்தியர்கள் வழிமறித்து விட்டார்களாம்' நெஞ்சில் அடித்தது போன்ற செய்தி.

'இந்தியர்கள் விடமாட்டார்கள், அதுவும் கிட்டண்ணையை நிச்சயமாக விடமாட்டார்கள்.'

'அணு அணுவாகத் திலீபன் சாகும் வரை பார்த்துக் கொண்டிருந்த இந்தியா தமிழர்கள் துடிக்கையிலும் புலேந்தி அம்மானையும் குமரப்பாவையும் சாகடித்த இந்தியா! தன் மரண வலைக்குள் சிக்கி விட்ட கிட்டண்ணையை நிச்சயமாக விடாது.'!தெரிந்த செய்திதான். ஒவ்வொருவரின் மனமும் சொன்ன செய்தி.

அவர்களுக்குத் தேவையெல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் அமுக்கப்பட வேண்டும்: அழிக்கப்பட வேண்டும். அதற்காக அவர்கள் எதுவும் செய்வார்கள்.

சர்வதேசச் சட்டங்களும் நடைமுறைகளும் இந்திய அரசுக்குத் தேவையற்றன. அதை மாற்றவும், திரிக்கவும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நேர்மையும், மனச் சான்றும் அந்தத் தேசத்தின் ஆளும் வர்க்கத்திற்கு இயல்பாகவே இல்லை.

சரணடைவதா! அது புலிகளின் மரபு இல்லை. அதுவும் கிட்டண்ணை! தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதி. தமிழர்களின் மானச் சின்னம். அவர்களின் மாபெரும் தளபதிகளில் ஒருவன். தலைகுனிவது.... சித்திரவதைப்பட்டு, அவமானப்பட்டுச் சாவது...

'கிட்டண்ணை காப்பாற்றப்பட வேண்டும்.' தேசத்தின் இதயம் துடித்தது. தமிழீழக் கரையெங்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் நின்று தவித்தார்கள்.

'எமது சிறிய படகு, அலைகளால் தூக்கி மேலே மேலே வீசப்பட வேகம் தடைப்படுகிறது. ஆனால், பாரிய நேவிப் படகுகள் கடல் அலைகளை வெட்டிக் கிழித்துக் கொண்டு பாய்ந்து வருகின்றன.

அவற்றிலிருந்து சிவப்பு நிறமாகச்

*தொடர்ச்சி 6ம் பக்கம்*

# அதிபர் ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம்

அதிபர்கள் ஆசிரியர்களுக்கென வழங்கப்பட இருக்கும் புதிய சம்பளத்திட்டம் பற்றிய விபரங்களை பொது நிருவாக அமைச்சு சுற்றறிக்கையாக வெளியிட்டுள்ளது. 09.2004 ஆம் இலக்க, 27.12.2004 ஆம் திகதி சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய சம்பளத்திட்ட அட்டவணை விபரங்கள் வருமாறு: 30.11.2004 இல் பெற்ற சம்பளத்திற்கும் நேரொத்த புதிய சம்பளப்படி நிலைக்கும் இடையே காணப்படும் மொத்தச் சம்பள அதிகரிப்பின் 50 வீதமோ அல்லது மாதம் 2500 ரூபா ஆகியவற்றில் எது கூடுதலாக இருக்கின்றதோ அத்தொகை 30.11.2004 இல் பெற்ற சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு 01.12.2004 இல் இருந்து வழங்கப்படும் மொத்த அதிகரிப்பின் மிகுதித் தொகை 01.01.2006 இல் இருந்து வழங்கப்படும். 30.11.2004 ஆம் திகதிக்கு முன் வழங்கப்பட்ட படிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளன. இச்சுற்றறிக்கையின் 10.2 இன்படி 01.12.2004 இன் பின் ஓய்வு பெறுபவர்களுக்கு இச்சுற்றறிக்கையில் அதிகரிக்கப்பட்ட முழுத் தொகையும் சேர்த்து கணக்கிடப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இனி சம்பள அளவுத் திட்ட அட்டவணையை நோக்குவோம்.

## இலங்கை அதிபர் சேவை தரம் - 01

| 11.2004 வரை சம்பளத் திட்டம் 138480-4X5520-6X6120-197280 | | 1-12-2004 முதல் சம்பள அளவுத் திட்டம் 193920-4X7740-6X8580-276360 | |
|---|---|---|---|
| வருடம் | மாதம் | வருடம் | மாதம் |
| 138480/= | 11540/= | 193920/= | 16160/= |
| 144000/= | 12000/= | 201660/= | 16805/= |
| 149520/= | 12460/= | 209400/= | 17450/= |
| 155040/= | 12920/= | 217140/= | 18095/= |
| 160560/= | 13380/= | 224880/= | 18740/= |
| 166680/= | 13890/= | 233460/= | 19455/= |
| 172800/= | 14400/= | 242040/= | 20170/= |
| 178920/= | 14910/= | 250620/= | 20885/= |
| 185040/= | 15420/= | 259200/= | 21600/= |
| 191160/= | 15930/= | 267780/= | 22315/= |
| 197280/= | 16440/= | 276360/= | 23030/= |

## இலங்கை ஆசிரியர் சேவை தரம் -01, இலங்கை அதிபர் சேவை தரம் -02-I

| 11.2004வரை சம்பள அளவுத்திட்டம் 132960-5X5520-5X6120-191160 | | 01.12.2004 முதல் சம்பளத்திட்டம் 186180-5X7740-5X8580-267780 | |
|---|---|---|---|
| வருடம் | மாதம் | வருடம் | மாதம் |
| 132960/= | 11080/= | 186180/= | 15515/= |
| 138480/= | 11540/= | 193920/= | 16160/= |
| 144000/= | 12000/= | 201660/= | 16805/= |
| 149520/= | 12460/= | 209400/= | 17450/= |
| 155040/= | 12920/= | 217140/= | 18095/= |
| 160560/= | 13380/= | 224880/= | 18740/= |
| 166680/= | 13890/= | 233460/= | 19455/= |
| 172800/= | 14400/= | 242040/= | 20170/= |
| 178920/= | 14910/= | 250620/= | 20885/= |
| 185040/= | 15420/= | 259200/= | 21600/= |
| 191160/= | 15930/= | 267780/= | 22315/= |

## இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2-I இலங்கை அதிபர் சேவை தரம்2-I

| 30.11.2004 வரை சம்பளத்திட்டம் 105420-7x3000-126420 | | 01.12.2004 முதல் சம்பளத்திட்டம் 147600-7x4200-177000 | |
|---|---|---|---|
| வருடம் | மாதம் | வருடம் | மாதம் |
| 105420/= | 8785/= | 147600/= | 12300/= |
| 108420/= | 9035/= | 151800/= | 12650/= |
| 111420/= | 9285/= | 156000/= | 13000/= |
| 114420/= | 9535/= | 160200/= | 13350/= |
| 117420/= | 9785/= | 164400/= | 13700/= |
| 120420/= | 10035/= | 168600/= | 14050/= |
| 123420/= | 10285/= | 172800/= | 14400/= |
| 126420/= | 10535/= | 177000/= | 14750/= |

## இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2-II இலங்கை அதிபர் சேவை தரம்-3

| 30.11.2004 வரை சம்பளத்திட்டம் 82320-12x2466-111840 | | 01.12.2004 முதல் சம்பளத்திட்டம் 121320-6x2460-6x3480-156960 | |
|---|---|---|---|
| வருடம் | மாதம் | வருடம் | மாதம் |
| 82320/= | 6860/= | 121320/= | 10110/= |
| 84780/= | 7065/= | 123780/= | 10315/= |
| 87240/= | 7270/= | 126240/= | 10520/= |
| 89700/= | 7475/= | 128700/= | 10725/= |
| 92160/= | 7680/= | 131160/= | 10930/= |
| 94620/= | 7885/= | 133620/= | 11135/= |
| 97080/= | 8090/= | 136080/= | 11340/= |

தொடர்ச்சி.......

05 ஆம் பக்கத் தொடர்ச்சி........

சீறிக் கொண்டு குண்டுகள் வரத் தொடங்கின.

ஓட்டம், ஓட்டம், ஜீவ மரண ஓட்டம்.

நேவிப் படகிலிருந்து பாய்ந்து வந்த 'ரேசர்' ரவுண்ஸ் ஒன்று எமது படகின் எரி பொருள் தாங்கியைத் துளைக்க... படகு தீப் பற்றி, பின்பு வெடித்துச் சிதறுகிறது.

பருத்தித்துறையிலே இன்பருட்டிக்கு நேரே எம் படகு துரத்தப்படுவதை அறிந்து, எம் வீரர்கள் படகு தப்பிவரும் என்று பார்த்துக் கொண்டிருக்க, எம்படகு எம் கண் முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம்.

ஆனால், சொல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை: கடல்'

பல வருடங்களுக்கு முன்பு சிறிலங்கா கடற்படையால் எமது தோழர்கள் வந்த படகு மூழ்கடிக்கப்பட்ட பொழுது, 'திரை கடல் ஓடினோம் - திரவியம் தேடி அல்ல' என்ற தலைப்பில், கிட்டண்ணை இப்படித்தான் எழுதினார்.

ஆனால் இன்று.... நீண்ட தொலைவில், இந்திய வல்லாதிக்கப் பிடிக்குள் கிட்டண்ணை..... நாங்கள் செல்ல முடியாது. ஏன்?

கடலில், புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க்கப்பல்கள். சரணடைய வேண்டும்: அல்லது அந்தப் பாரிய போர்க்கப்பல்கள், சமாதான நோக்கத்தோடு ஆயுதங்களற்றுவந்த புலிகளின் கப்பலை மூழ்கடிக்கும்.

பின்பு, தங்கள் கடல் எல்லைக்குள் நுளைந்து தமது போர்க் கப்பலைத் தாக்கவந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும்.

இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின் மீது இலகுவாகப் பழி சுமத்தப்படும்.

'சரணடையப் போவதில்லை' சாவு நிச்சயமாகிப் போனது.

ஆனால் அந்தச் சாவு எதிரிகள் தலை குனியும் சாவாக இருக்க வேண்டும்: சரித்திரம் படைக்க வேண்டும்: தாய் நிலத்தைத் தலை நிமிரச் செய்ய வேண்டும்.

சண்டைக் களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பாற்ற, நூற்றுக் கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், இன்று.....

குட்டிசிறி அருகில் நின்றான். அவன் சின்ன வயதில் இயக்கத்தினுள் வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர்.

அவன் பெரிய ஆளாக வளர்ந்த பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை.

அவன் அழுதிருப்பான்: தனக்காக அல்ல கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதி மிக்கவன் ஒரு போதும் கலங்கியவனில்லை.

இப்போது கலங்கியிருப்பான். மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் பிரச்சினை எல்லாரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.

இந்திய வல்லாதிக்கப் பேய்கள் இறங்கி வரப் போவதில்லை.

எங்கள் தொலைத் தொடர்புக் கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது.

தலைவர் தவித்துக் கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்துழைத்த தோழன்.

சாவின் விழிம்பில்....

முடிவு உறுதியாகியது. ஒரு கணத்தில் கப்பல் சிதறும்: காணாமற் போகும்.

கப்பற் சிப்பந்திகள் வெளியேறினார்கள். தேசம், அம்மா, அண்ணன், அன்பான மனைவி, தன்னில் உயிரையே வைத்திருக்கும் தலைவன் எல்லாருமே கிட்டண்ணையின் நெஞ்சில் ஒரு கணம் வந்து விட்டுச் சென்றிருக்கலாம்: ஆனால் வெளித் தெரியாது. விடைபெற்றிருப்பார்கள் தேசத்திடமிருந்து, தோழர்களிடமிருந்து, தலைவனிடமிருந்து.....

கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்த தொலைத் தொடர்புக் கருவி, நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா... வருகிறதா....

'கிட்டண்ணையை இழந்து விட்டோம்'

கடல் ஆர்ப்பரித்து. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது: தவித்தது: கதறி அழுதது: ஒரு கணம் தயங்கி நின்றது. முடியாத இழப்புளங்கள் போராட்டப் படகு இப்படித்தான்.

தாங்க முடியாத இழப்புகள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் 'தலைவன் இருக்கிறான்' எனத் தொடர்ந்து செல்லும். அது கிட்டண்ணை சொல்லித் தந்த பாடம்!

**நன்றி**
**தளபதி கிட்டு**
**ஒரு காலத்தின் பதிவு**

# சட்டசபை தேர்தலில் போட்டியிட ஆசனமின்மையால் தொண்டர்கள் முற்றுகை



(புதுடில்லி)

அரியானா சட்டசபை தேர்தலில் போட்டியிட ஆசனம் கிடைக்காத காங்கிரஸ், தலைவர்கள் பலர் டில்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தை தொண்டர்களுடன் முற்றுகையிட்டனர். இதனால், அங்கு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது.

அரியானாவில் அடுத்த மாதம் 3ஆம் திகதி சட்டசபைத் தேர்தல் நடைபெறும். காங்கிரஸ், வேட்பாளர்கள் தேர்வில் எட்டு முதல் 10 தொகுதிகளில் குழப்பமான சூழ்நிலை நிலவுகிறது. இந்தத் தொகுதிகளில் ஆசனம் கிடைக்காத தலைவர்கள் பலர் நூற்றுக்கணக்கான தொண்டர்களுடன் டில்லியில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர்.

இதனால், தலைமை அலுவலகத்தின் கதவுகள் மூடப்பட்டன. அங்கு கூடியிருந்த தொண்டர்கள் சோனியா மற்றும் ராகுல் காந்தியை வாழ்த்தி கோஷம் போட்டனர். அதே நேரத்தில் 'ஏசி' அறையில் உட்கார்ந்து இருக்கும் சில தலைவர்கள் தான் இந்த பிரச்சினைக்கு காரணம் என்றும் கண்டனம் தெரிவித்தனர். நிலைமை மோசமடைவதை பார்த்த பொலிசார் அலுவலகத்தின் வரவேற்பு அறைக் கதவுகளை உட்புறமாகப் பூட்டினர். பத்திரிகையாளர்கள், தலைவர்களை தவிர வேறு யாரையும் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

ஒரு சில தலைவர்கள் தொண்டர்களுடன் சோனியா காந்தி வீட்டு முன்பும் கூடி கோஷம் போட்டனர். அரியானா சட்டசபைத் தேர்தலில் போட்டியிட ஆசனம் கிடைக்காத காங்கிரஸ், தலைவர்கள் பலர் டில்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தை தொண்டர்களுடன் முற்றுகையிட்டனர்.

# உலக செய்திகள்

## கள்ளச் சாராயம் விற்பதில் சிறுவர்களை ஈடுபடுத்தும் அபாயம்

(ராய்ட்டர்)

சிறுவர்களிடம் சாராயப் பைகளைக் கொடுத்து விற்க சொல்லும் அவலநிலை அரங்கேறியுள்ளது. சாராயத்தின் கொடுமையை அறியாத சிறுவர்கள் சாராயப் பைகளை புதரில் மறைத்து வைத்து விற்பனை செய்கின்றனர்.

சிறுவர்களுக்கு தினமும் ரூபா. 20 சம்பளம் கொடுக்கின்றனர். இதனால், சிறு வயதிலேயே கெட்ட பழக்கத்துக்கு ஆளாவதோடு சாராயம் குடிக்கவும் கற்றுக் கொள்கின்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதை அறியாத பொலிசார் சாராய விற்பனை செய்வது யார் எனத் தெரியாமல் குழப்பத்தில் இருந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் நெல்லிக் குப்பப் பொலிசாரை கண்டு 10 வயதுச் சிறுவன் ஒருவன் திடீரென ஓட்டம் பிடித்தான். உடனே அவனைத் துரத்தி பிடித்து பொலிசார் விசாரணை செய்தனர். அப்போது தான் அவன் சாராயம் விற்பனை செய்வது தெரியவந்தது. அவனிட மிருந்து சாராய பைகளைக் கைப்பற்றிய பொலிசார், அவனை சாராயம் விற்பனை செய்யச் சொன்னதுயாரென விசாரணை செய்து வருகின்றனர்.

## தெற்கு அந்தமான் மின்னிணைப்பு பாதிப்பு நிலைமை வழமைக்கு திரும்ப காலதாமதம்

(மூங்கில் தீவு)

சுனாமி அனர்த்தம் நடந்து 20 நாட்கள் ஆன பிறகும் தெற்கு அந்தமான் பகுதியில் மின் உற்பத்தி இன்னும் தொடங்கவில்லை. இங்குள்ள 20 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் முழு வீச்சில் செயல்பட இன்னும் மூன்று மாதம் ஆகலாம் எனக் கூறப்படுகிறது.

சூர்யா சக்ரா மின் கழகம் ( எஸ். பி. சி. எல்.,) தான் தெற்கு அந்தமான் பகுதியில் மின் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது. இங்குள்ள கடற்கரையோரம், 20 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் தற்போதைய நிலை குறித்து சூர்யா சக்ரா மின் கழக இயக்குனர் மூர்த்தி கூறியதாவது:

சுனாமி அனர்த்தம் நடந்த போது கடற்கரையோரம் இருந்த மின் உற்பத்தி நிலையம் முழுவதுமாக கடல் நீரில் மூழ்கி விட்டது. இதனால் இந்தப் பகுதியில் மின் இணைப்பு முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது. ஜேர்மன் நாட்டின் பொறியியலாளர், தொழில்நுட்ப நிபுணர்களும் மின் உற்பத்தியை மீண்டும் தொடக்கி வைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

ஆனாலும், முழு வீச்சில் மின் உற்பத்தி தொடங்க மூன்று மாதமாகும். இது கூட நிரந்தர தீர்வாக அமையாது. கடற்கரையோரம் அமைந்துள்ள மின் உற்பத்தி நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றினால் தான் பிரச்சினை முடிவுக்கு வரும். அந்தமான் நிக்கோபார் தீவுகளில் வசிக்கும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தெற்கு அந்தமான் பகுதியில் வசித்து வருகின்றனர். எனவே, அவர்களின் வீடுகளுக்கு மின் இணைப்பை சரிசெய்வது முக்கிய பணியாக கருதப்படுகிறது. இங்கு கட்டுமான வசதிகளும், தொழிலாளர் கிடைப்பதும் மிகக் குறைவாக உள்ளது.

## பாகிஸ்தானுக்குள் நுழைய முயன்ற மியான்மார் நாட்டவர்கள் கைது

(ஜம்முஹாஸ்)

காஷ்மீரில் சர்வதேச எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவ முயன்ற 42 பேரை எல்லைப் பாதுகாப்பு படையினர் கைது செய்தனர். இது குறித்து எல்லைப் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது: காஷ்மீரில் சாம்பா பகுதியில் உள்ள பாம்பியா என்ற இடத்தின் அருகே சர்வதேச எல்லை உள்ளது. இங்கு நேற்று முன்தினம் அதிகாலை 2.50 மணிக்கு வீரர்கள் வீதி நடவடிக்கைப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சர்வதேச எல்லைப்பகுதிக்கருகே கும்பலாக சிலர் நின்றிருந்தனர். அவர்களை எல்லைப் பாது காப்பு படைவீரர்கள் சுற்றி வளைத்து கைது செய்தனர். அந்தக் கும்பலில் 6 பெண்கள், இரண்டு சிறுவர்கள் உட்பட 39 பேர் இருந்தனர். இவர்கள் அனைவரும் மியான்மார் நாட்டைச் சேர்ந்தவர்கள். கூலித் தொழிலாளி வேலை வாங்கித் தருவதாக சில முகவர்கள் இவர்களிடம் கூறியுள்ளனர். அதற்காகவே இவர்கள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவ முயன்றுள்ளனர். ஆர். எஸ். புராபகுதியில் குலியான் என்ற இடத்தில் வங்கதேச நாட்டைச் சேர்ந்த மூன்று பேர்கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 42 பேரும் விசாரணைக்காக பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



இசையால் பறந்தம் சுனாமி சோக. சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர் தேவனாம்பட்டினம் கடற்கரையில் உலகப் புகழ்பெற்ற டிரம்ஸ் சிவமணி வாசித்த பாடலுக்கு இந்தி நடிகர் விவேக் ஓபராய் விசிலடித்து ஆட்டம் போட்டார்.

## விரைவில் வெளியேறும்

(ராய்ட்டர்)

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளின் மீட்புப் பணிக்காக என்று இறக்கப்பட்டுள்ள பாரிய அமெரிக்கப் படைகள் விரைவில் வெளியேறும் என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறையின் துணைச் செயலாளர் பவுள் ஒல்ப்விட்ஸ் அறிவித்துள்ளார். ஆசிய நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள அமெரிக்கப் படைகளின் பணிகளைப் பார்வையிடுவதற்காக ஆசிய பயணமொன்றை அவர் மேற்கொண்டுள்ளார்.

## சுனாமி தகவல் திரட்டும் தளம் அமைக்க இஸ்ரோ முடிவு

(பானாஜி)

சுனாமி அனர்த்தம் குறித்து அறிய தகவல் திரட்டும் தளம் ஒன்றை அமைக்க இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) முடிவு செய்துள்ளது.

நாட்டின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றான இஸ்ரோவுக்கு சுனாமி குறித்து தகவல் கிடைக்கவில்லை எனினும், சுனாமி பாதிப்பு ஏற்படப் போகின்றது என்பதை சில மணி நேரத்துக்கு முன் அறிந்து, மக்களை எச்சரிக்க தகவல் திரட்டும் தளம் ஒன்றை அமைக்க இஸ்ரோ முடிவு செய்துள்ளது. சுனாமி அலைகள் எந்தப் பகுதியைத் தாக்கும் என்பதை மனிதர்களால் முன் கூட்டியே அறிய முடியாது. எனினும், கடலில் தகவல் திரட்டும் தளம் அமைப்பதன் மூலம் சுனாமி உருவாவதை அறிய முடியும். சுனாமி என்பது எதிர் பாராத ஒன்று என்பதால் அதை எதிர்கொள்ள நாங்கள் முன்கூட்டியே தயாராக இல்லை.

ஒரு நூற்றாண்டில் மிக அரிதாக ஒரு சில நேரங்களில் தோன்றும் சுனாமியை உடனடியாக செயற்கை கோளும் கண்டுபிடிக்க முடியவில்லை. உருவாகும் இடத்தில் சுனாமி அலைகளின் உயரம் மிகக்குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். இதையும் மீறி சுனாமி அலைகள் தோன்றுவதை அறிந்தாலும், அந்த அலைகள் எந்தெந்த பகுதிகளில் அனர்த்தம் நடத்தும் என்பதைக் கணிக்க முடியாது. இவ்வாறு மாதவன் நாயர் கூறினார்.

## பிரிட்டன் பொலிஸ்துறை திறமை பற்றிய ஆய்வு அறிக்கையில் கண்டனம்

(லண்டன்)

உலகளவில் பிரிட்டன் பொலிசார் திறமையற்றவர்களாக மாறிவிட்டனர். முன்பு இருந்ததை விட குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டதே இதற்கு சான்று என ஆய்வு ஒன்றில் கூறப்பட்டுள்ளது. பிரிட்டன் பொலிசாரின் செயல்பாடு குறித்தும், குற்றங்களின் தன்மை குறித்தும் 'சிவிடாஸ்' என்ற அமைப்பு ஒரு ஆய்வு நடாத்தியுள்ளது. அந்த ஆய்வு அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த சில காலமாகப் பிரிட்டன் பொலிசார் அலுவலகத்தில் அமர்ந்தபடி பணியாற்றவே விரும்புகின்றனர். குற்றங்களில் ஈடுபடுபவர்களை எதிர்கொள்வதையும், குற்றங்கள் நடக்காமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

உலகளவில் திறமையற்ற பொலிசாராக பிரிட்டன் பொலிசார் உள்ளனர் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. இதனால், பிரிட்டனில் உள்ள குற்றவாளிகளுக்குக் குற்றங்களில் ஈடுபடுவது மிக எளிதாகி விட்டது. இதே போன்றதொரு நிலைமை அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் கடந்த 1960ம் ஆண்டுகளில் உருவானது. ஆனால், அந்த நாடுகளில் உள்ள பொலிசார் திறமையாக செயல்பட்டு குற்றங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி விட்டனர்.

ஆனால், பிரிட்டன் பொலிசார் அதுபோல் குற்றங்கள் நடக்காமல் தடுப்பது, கீழ்மட்ட அளவில் உள்ள ஒழுங்கீனத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவது, சமூக விரோதச் செயல்களை மட்டுப்படுத்துவது போன்றவற்றில் அக்கறையில்லாமல் உள்ளனர்.

பிரிட்டனில் குற்றங்கள் அதிகரித்துள்ள போக்கு விசித்திரமாக உள்ளது.

## பன்னிரெண்டு ஆண்டுகளாக ஏமாற்றிய காதலன் மீது இளம் பெண் புகார்

(பண்ருட்டி)

பண்ருட்டியில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றிய வாலிபர் மீது இளம்பெண் ஒருவர் தற்போது பொலிசில் புகார் செய்துள்ளார். புதுச்சேரி மாநிலம் மாகி பண்டகல்லி ஜவகர் நகரில் வசிப்பவர் ஏசுபாதத்தின்.

மகள் ரெஜினா எலிசபெத் (30). இவர் கடந்த 92ம் ஆண்டு பண்ருட்டி பொலிஸ் லைன் 3வது தெருவில் வசித்து வந்தார். அப்போது, பண்ருட்டி மேலப்பாளையம் பகுதியைச் சேர்ந்த மோகன்ராஜ் என்பவரும், ரெஜினா எலிசபெத்தும் காதலித்து வந்தனர்.

திருமணம் செய்வதாக கூறி ஆசை வார்த்தையால் ரெஜினாவை மயக்கியதால். தற்போது 7 வயதில் ஒரு குழந்தை உள்ளது. இதற்கிடையே, தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு ரெஜினா எலிசபெத் பலமுறை மோகன்ராஜிடம் வற்புறுத்திக் கேட்டும் அவர் மறுத்துவிட்டார்.

மேலும், இருவரும் திருமணம் செய்து கொள்ள மோகன்ராஜின் உறவினர்கள் அசோக்ராஜ், சங்கர் ஆகிய இருவரும் தடையாக இருந்துள்ளனர்.

எனவே, தனது குழந்தையின் பாதுகாப்பிற்கும், படிக்க வைக்கவும் பொலிசார் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனதெரிவித்தார்.




# மெல்போர்னில் இன்று ஓபன் டென்னிஸ் போட்டிகள் ஆரம்பம்



(மெல்போர்ன்)

கிராண்ட் ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் மெல்போர்னில் இன்று தொடங்குகின்றது. ஆண்கள் பிரிவில் இம்முறையும் ரோஜர் பெடரர் சம்பியன் பட்டம் வெல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

டென்னிஸ் வீரர்களை பொறுத்தவரை அவுஸ்திரேலிய ஓபன் விசேஷமானது. ஏனென்றால் இங்கு வெற்றிபெற்று ஆண்டை வெற்றிகரமாக தொடக்க வேண்டும் என்பதே இவர்கள் கனவாக இருக்கும். ஆண்கள் பிரிவில் இம்முறை சாம்பியன் பட்டத்திற்கான போட்டியில் உள்ளவர்களில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அமெரிக்காவின் ஆண்டி ரோடிக், அவுஸ்திரேலியாவின் ஹெவிட், அமெரிக்காவின் ஆந்த்ரே அகாசி ஆகியோரை குறிப்பிட்டுச் சொல்லாம்.

இதில் நடப்பு சம்பியன் பெடரருக்கு வாய்ப்புகள் அதிகம். பெடரர் ஆட்டம் புதிய முறையில் உள்ளது. அவரை வீழ்த்துவது சிரமம், என்கிறார் ஹெவிட். இவர் பெடரரிடம் மொத்தம் ஏழு முறை மோதி ஒரே ஒரு போட்டியில் தான் வெற்றி பெற்றுள்ளார். இதே போல் ஆண்டி ரோடிக் கூட சமீபத்தில் பெடரரை எதிர்த்து விளையாடி அனைத்து போட்டிகளிலும் தோல்வி அடைந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் அலிசியா மோலிக் நல்ல பார்மில் உள்ளார். இந்தியாவின் சார்பில் முதன் முறையாக சானியா மிர்சா பங்கேற்கிறார். இதனால் பெண்கள் பிரிவில் பட்டம் வெல்வது யார் என்பதை கணிப்பது கொஞ்சம் சிரமம் தான்.

# சுனாமி கிரிக்கெட் போட்டியில் சச்சின் விளையாட மாட்டார்.



(டுபாய்)

இரண்டாவது சுனாமி ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

சுனாமி நிவாரண நிதி திரட்டுவதற்காக உலக லெவன், ஆசிய லெவன் அணிகளுக்கு இடையே இரண்டு ஒருநாள் போட்டிகளை நடத்த சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) முடிவு செய்தது. இதன்படி முதல் போட்டி அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் கடந்த 10ம் தேதி நடந்தது. இதில் முழங்கை காயம் (டென்னிஸ் எல்போ) காரணமாக முதல்தர துடுப்பாட்ட வீரர் சச்சின் களத்தடுப்பாட்டம் மட்டும் செய்தார். அடுத்ததாக, வரும் பெப்ரவரியில் இரண்டாவது போட்டி ஆசியாவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அநேகமாக இப்போட்டி கல்கத்தாவில் நடத்தப்படலாம். இதிலும் காயம் காரணமாக சச்சின் பங்கேற்பது சந்தேகமாக உள்ளது. நேற்று முன்தினம் டுபாய் நாளிதழ் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில், காயத்திலிருந்து முழுமையாகக் குணமடைவதற்கான வழிவகையில் தற்போது ஈடுபட்டுள்ளேன். இது குறித்து டாக்டர்களிடம் ஆலோசித்த போது, இன்னும் ஒரு மாதம் முழுஓய்வெடுக்க வேண்டும் என கூறியுள்ளனர். இதனால் இரண்டாவது சுனாமி போட்டியில் பங்கேற்பது குறித்து இப்போது உறுதியாக கூற முடியாது, என்றார்


# தென்னாபிரிக்கா சிறப்பான நிலை; கிப்ஸ் அபார ஆட்டம்

(ஜோகனஸ்பர்க்)

ஜோகனஸ்பர்க் டெஸ்ட் போட்டியில் கிப்ஸ் அபாரமாக ஆடி சதம் அடிக்க தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்சில் 306 ஓட்டம் குவித்தது. தென்னாபிரிக்கா, இங்கிலாந்து இடையிலான நான்காவது டெஸ்ட் ஜோகனஸ்பர்க் நகரில் நடக்கிறது. முதல் இரண்டு நாட்கள் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்புக்கு 411 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக் கொண்டது. மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. முதல் இன்னிங்சை தொடக்கிய தென்னாபிரிக்க அணி, ஹோகார்ட் வேகத்தில் தடுமாறியது.

ஸ்மித் (29), ரூடால்ப் (4), கலிஸ் (33) ஆகியோரை ஹோகார்ட் வெளியேற்றினார். அடுத்து வந்த டிப்பெனார் டக்ஹகில் ஆட்டமிழந்தார். டி வில்லியர்சும் (19) ஏமாற்றமளித்தார்.

இதனால் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட் இழப்புக்கு 184 ஓட்டங்களுடன் திணறியது. இந்நிலையில் ஜோடி சேர்ந்த கிப்ஸ், பவுச்சர் அபாரமாக ஆடி அணியை மீட்டனர். கிப்ஸ் 207 பந்துகளில் சதம் அடித்தார். கடந்த மார்ச் 2004க்குப் பிறகு இவர் அடிக்கும் முதல் சதம் இது. பவுச்சர் 18வது



அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இந்த ஜோடி 120 ஓட்டம் சேர்த்த நிலையில் பவுச்சர் (64) அன்டர்சன் பந்தில் ஆட்டமிழந்தார். மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 306 ஓட்டங்களுடன் உள்ளது.

கிப்ஸ் 136 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். இங்கிலாந்து தரப்பில் ஹோகார்ட் 4 அன்டர்சன் 1,பிளின்டாப் 1விக்கெட் கைப்பற்றினர். தற்போது தென்னாபிரிக்க அணி, இங்கிலாந்தை விட 105 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது.




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள எமது துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதா பிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது. நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் முடிந்தவரை அவற்றை வெளிக்கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்

# சுனாமி கடற்கோளால் பாதிக்கப்பட்ட தம்பட்டைக் கிராம மக்களின் அவலம்

தம்பட்டைக்கிராமம் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பகுதி டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பினால் இந்தக்கிராமம் இருந்த இடம் தெரியாமல் அழிந்துள்ளதோடு 140 பேர் வரையில் இறந்தும், 86 பேர் காணாமல் போயுள்ளதோடு மிகுதியானவர்கள் உயிர் தப்புவதற்கு பல இடங்களுக்கும் சிதறி ஓடியுள்ளவர்களில் ஒரு பகுதியினர் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூன்று நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இந்தச் சம்பவம் நடந்து 17 தினங்களாகியும் இந்த மூன்று நலன்புரி நிலையங்களிலுள்ள தம்பட்டை மக்களின் நிலமை என்ன என்று திருக்கோவில் பிரதேச செயலாளரோ, தம்பட்டை கிராம சேவையாளர்களோ வந்து பார்வையிட்டு எங்களுக்கான மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று தம்பட்டைக் கிராம மக்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.

ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள மூன்று பாடசாலைகளையும் 20ம் திகதி முதல் செயல்படுத்தவதற்காக இங்குள்ள திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த தம்பட்டைக் கிராமத்தின் மக்களின் ஒரு பகுதியினரை 12ம் திகதி மாலை உழவு இயந்திரப் பெட்டிகள் மூலம் திருக்கோவில் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அப்படி அனுப்பியவர்கள் கிராமமே அழிந்து சுடலை மயானம் போல் காட்சியளிக்கும் தம்பட்டையில் இறக்கிவிட்டுத் திரும்பியதினால் இரவுப் பொழுதை வீதிக்கரையிலே களிக்க வேண்டிய ஒரு நிலமை ஏற்பட்டதாகவும் இதில் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகி அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் ஒருவர் மயக்கமுற்ற நிலையில் வை த்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.ஜெயச்சந்திரன் தெரிவித்ததோடு இது மனித உரிமை மீறும் செயல் என்று அரசாங்க அதிபருக்கும், மனித உரிமை ஆணைக் குழுவுக்கும் தெரிவித்துள்ளார்.

தற்போது நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கு ஆறு மாத காலத்திற்கு போசாக்குள்ள உணவுகள் பெற்றுக் கொள்வதற்கான விசேட அட்டை ஒன்றும், சமையல் வேலைகளுக்கு வேண்டிய பாத்திரங்களை வாங்குவதற்கு 2500 ரூபா வழங்கும் வேலைகள் தற்போது நடைபெறுகின்றது. ஏற்கனவே பாதிக்கப்பட்ட 11 பிரதேச செயலாளர்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதல் கட்ட உதவிகளுக்கு ஐந்து லட்சம் ரூபா அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**வி.பி.சிவப்பிரகாசம்.**

# கற்சேனை, தாந்தாமலை பிரதான வீதி தார் வீதியாக மாறுமா?

கற்சேனை தாந்தாமலை வீதியானது பழமை வாய்ந்த வீதியாகும். இவ் வீதியானது அண்ணளவாக 20 கிலோ மீற்றர் தூரமுடையதாகக் காணப்படுவதோடு நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த வீதியால் பயணம் செய்வதோடு விசேட நாட்களில் பல பஸ்களும், முச்சக்கர வண்டிகளும், உழவு இயந்திரங்களும் பயணம் செய்யும் இவ்வீதி கற்களும், குழியுமாகவே காணப்படுகின்றது.

இவ்வாறு பிரசித்தி பெற்ற இவ்வீதியை திருத்த வேண்டும் என்று 6 வருடங்களுக்கு முன்னர் 1 கிலோ மீற்றர் தூரம் வரை வீதியின் இருபுறமும் கற்கள் போடப்பட்ட நிலையில் காணப்படும். இது துவிச்சக்கரவண்டி கூட செல்ல முடியாத நிலையில் காணப்படுகின்றது. இவ்வீதியில் ஒரு நேரத்தில் இரண்டு வாகனங்கள் எதிரே எதிரே வந்தால் மாறிச் செல்ல முடியாத நிலையில் ஒரு வாகனம் ஒன்றை மாறிச் செல்ல வேண்டும் என்றால் 10 நிமிடம் என்றாலும் தேவை. ஏனெனில் பள்ளமும், படுகுழியுமாக உள்ள வீதியால் ஒரே நேரத்தில் மாறும்போது ஒரு வாகனம் இன்னொரு வாகனத்துடன் தவறுதலாக தட்டுப்படும் நிலையில் சாரதிகள் இரண்டு பேருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு சென்ற மாதம் பஸ் ஒன்றின் சாரதிக்கும், உழவு இயந்திரச் சாரதிக்கும் இடையில் பலத்த முரண்பாடுடன் தமது வாகனங்களை எடுத்துச் சென்றனர்.

இவ் வீதியினை தாந்தாமலை உற்சவம் வரும் காலத்தில் மாத்திரம் ஓட்டை வீட்டுக்குப் பொலித்தீன் போட்டு மூடுவது போல வீதியைத் திருத்துவார்கள் பின்னர் ஓட்டை வீதியாகவே போய்விடும் இந்த நிலையில் உழவு இயந்திரங்களில் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் புழுதி காரணமாக என்ன தாந்தாமலை செல்லும் பக்தர்கள் சிவப்பு நிறமா? செம்மஞ்சள் நிறமா? என்று ஒருவரை ஒருவர் கேலி பண்ணுவதையும் காணலாம். இவ்வாறு இன்றைய நிலையில் இவ் வீதிகள், வாய்க்கால்களாகக் காணப்படுகின்றது. ஒரு வாகனம் கூட செல்ல முடியாத நிலையில் உள்ளது. இந்த வீதியை அருகில் உள்ள கிராம மக்களும், வயல்காரர்களும், தங்களின் பகுதியில் காணப்படும் குழிகளை மூடிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. தற்பொழுது அறுவடை ஆரம்பித்துள்ளதால் உழவு இயந்திரங்கள் கூட நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்ல முடியாத நிலையில் வீதி சேதமடைந்து காணப்படுகின்றது. எனவே இவ்வீதிகளினால் பல உயர் அதிகாரிகள் பயணம் செய்கின்ற போதும் வீதி தொடர்பான கவனம் மிகக் குறைவான நிலையில் தான் காணப்படுகின்றது. ஆகவே தயவு செய்து விரைவாக பாராளுமன்ற உறுப்பினர்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் கவனம் எடுத்து இவ் வீதியினைத் திருத்தித் தருமாறு ஈழநாதமூடாக கோரிக்கை விடுக்கின்றேன்.

**ஒளி நிலவன்.**

# காப்புறுதி கொடுப்பனவு சம்மந்தமாக இலங்கை வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்க


இலங்கை வங்கியில் ரண் கெகுளு (சிறுவர் சேமிப்புக் கணக்கு) வைத்திருக்கும் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அல்லது உயிரிழந்த சிறுவர்களுக்கான காப்புறுதிக் கொடுப்பனவுகளை பெற்றோருக்கு வழங்க இலங்கை வங்கி முன்வந்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் அருகில் உள்ள இலங்கை வங்கி கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

**(செ.பேரின்பராஜா)**

## சிந்தனைக்கு!

நாம் உறுதியுடன் தொடர்ந்தும் போராடுவோம்: எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை, நாம் தொடர்ந்து போராடுவோம்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**




# ஈழநாதம்

மக்கள் தினசரி மட்டக்களப்பு பதிப்பு

**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை**

**தொலைபேசி : 065-2226110,**

batti @ eezhanatham .com

**17.01.2005**


## அவசரகால நிலைமையும் அனர்த்த நிவாரண பணியும்

கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிப்புற்ற பகுதிகளில் தற்போது அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமையும் அனர்த்த நிவாரணப் பணிகளுக்கு படைத்தரப்பை ஈடுபடுத்தியுள்ளமையும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜனநாயக ஆட்சி என்று கூறிப் பெருமை கொள்ளும் ஆட்சியாளர்கள் முற்று முழுதாக இராணுவ மயப்படுத்துவது ஜனநாயகப் பண்புகளை சாகடித்து விடும். இது ஒரு இராணுவ அதிகாரத்தை உயர்வுபடுத்திக் காட்டுவதாகவும் கருதப்படுகிறது.

தமிழர் தாயகமான மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மற்றும் களுத்துறை, காலி, ஹம்பகா, புத்தளம், மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு ஆகிய இந்த பதின்நான்கு மாவட்டங்களிலும் அவசர கால நிலையை அரசு 4ம் திகதி முதல் பிரகடனப்படுத்தியுள்ளதுடன், சிறிலங்கா இராணுவத்தை முழுமையாக நிவாரணப் பணிகளுக்கு அமர்த்தியுள்ளனர். இது இராணுவ ஆக்கிரமிப்பின் வெளிப்பாடு.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் மிகப் பாதிப்புக்குள்ளான தமிழர் தாயகத்தில் இவ்வாறு படைத்தரப்பை அமர்த்தியிருப்பதும் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தியிருப்பதும் மேலும் நிலைமையை மோசமாக்குமே தவிர சுமூக நிலையை தோற்றுவிக்காது.

அனர்த்தத்தால் பாதிப்புற்று உயிர், உடமைகளை இழந்து நிர்க்கதியாகியுள்ள மக்களுக்கு நிவாரணமளிக்கும் காரியத்தில் படைத்தரப்பை அரசு ஈடுபடுத்தியிருப்பதன் மூலம் சுதந்திரமான உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் வாழ்வுடன் ஒட்டிநிற்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துயர்துடைப்புப் பணிகளைக்கூட சிங்களஇராணுவம் முகாம்களைப் பொறுப்பேற்றதன் பின் செய்யமுடியாத அவலம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துயர்துடைப்புப் பணிகளின் போது வேண்டுமென்று இராணுவத் தலையீடுகள் காரணமாக பெரும் முரண்பாடுகள் உருவாகின.

தற்போது சிலஇடங்களில் மக்கள் இராணுவத்தினர் அகதி முகாம்களை பாராமரிப்பதை எதிர்த்து போர்க் கொடி தூக்கியுள்ளனர். வேறு சில இடங்களில் இருந்து மக்கள் வெளியேறிச் சென்றும் விட்டனர்.

இவ்வாறு மக்களைப் புண்படுத்தும் மனோபாவத்தை படைத்தரப்பு மேற்கொள்ளும் நிலையில் அவசரகாலப் பிரகடனம் அவர்களது செயற்பாடுகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரண உதவிகள் மீள்கட்டுமானப்பணிகள் மீள்குடியேற்றம் போன்ற நடவடிக்கைகள் குறுகிய காலத்துக்குள் செய்து தீர்வு கண்டுவிட முடியாது.

மீட்புப் பணியில் இருந்து மீள்குடியேற்றம் செய்து அங்கு ஒரு இயல்புச் சூழலை உருவாக்குவதற்கு நீண்டகால அவகாசம் தேவை.

எனவே இராணுவத்தினரின் இந்த அதிகாரதிணிப்பு அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எந்தளவில் சுயாதீனத் தன்மை வாய்ந்ததாக அமையும் என சந்தேகிக்க இடமுண்டு.

வடக்குக் கிழக்கில் அனர்த்தத்தினால் பாதிப்புற்ற பகுதிகளுக்கான அனர்த்த நிவாரணப் பணிகள் பக்கச் சார்பின்றி சமமாக பகிரப்பட வேண்டுமென தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தியிருக்கும் நிலையில் இராணுவ மயப்படுத்தலும் அவசரகாலச் சட்ட அமுலும் நிலைமைகளை மேலும் மோசமாக்கும்.

இது ஒரு போதும் தமிழ் பேசும் சமூகங்களிடமிருந்து சிறிலங்காப் படைத்தரப்பும் ஆட்சியாளர்களும் நம்பகத் தன்மையை வென்றெடுக்க முடியாது.

எனவே அனர்த்த நிவாரணப் பணிகள் சுயாதீனமாக அமுல் படுத்தப்பட வேண்டும். அதில் இராணுவக் குறுக்கீடுகள் பாரபட்சம் போன்ற நடவடிக்கைகள் காட்டாது அரசு மனிதாபிமான அனுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

# சுனாமியால் சேதமடைந்த பகுதிகளை பிரிட்டிஸ் தூதுவர் சென்று பார்வை

(காத்தான்குடி நிருபர்)

பிரிட்டிஸ் தூதுவர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து சுனாமி அனர்த்தத்துக்குள்ளான கோட்டைக் கல்லாறு, பெரிய கல்லாறு, ஓந்தாச்சி மடம் போன்ற பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிட்டார்.

நேற்று முன்தினம் வருகை தந்த பிரிட்டிஸ் தூதுவர் ஸ்டீவின் எபன்ஸ்சே மட்டக்களப்பில் முகாமிட்டுப் பணிபுரியும் பிரிட்டிஸ் றோயல் படையினரையும் பார்வையிட்டதுடன் கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணியினைத் துரிதமாக மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்ட அவர் கல்லாறு வை.எம்.சி.ஏ பணிமனையில் பொது மக்களையும் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த றோயல் படை அணியினர் தற்போது பெரிய கல்லாற்று பகுதியில் கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## இந்த சிறுவனை காணவில்லை தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்



(நமது நிருபர்)

அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த திருச்செல்வமும் அவரது மகன் கிருஷாந்தனும் (வயது-08) தங்கள் உறவினர் வீடான 40ம் கட்டை, சின்னமுகத்துவாரம், அக்கரைப்பற்றுக்குச் சென்றபோது கடந்த 26ஆம் திகதி நடந்த "சுனாமி"அனர்த்தத்தால் அலையில் சிக்கி தந்தை திருச்செல்வம் உயிரிழுந்தார். அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆனால் அவரது மகன் கிருஷாந்தன் தற்போதும் உயிருடன் இருப்பதாக அவரது தாய் உணர்கின்றார். தயவு செய்து கிருஷாந்தன் தொடர்பாக ஏதும் விடயங்கள் அறிந்தவர்கள் உடனடியாக கீழ்காணும் தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும்.

ஈழநாதம் -065-2226110

கே.சிவம்-கண்ணிவெடி அகற்றும் பிரிவு - 065-2226651

கு.தேவராஜா - மட்-தமிழர் புனர்வாழ்வுக் கழகம் -· 065-2225399

அல்லது

ரீ.துளசியம்மா

கிராம அபிவிருத்திச் சங்கவீதி,

அரசடித்தீவு,

கொக்கட்டிச்சோலை.

## நாவலடி விபுலானந்தா வித்தியாலயத்தில் ஐ.தே.க குழுவினர் சிரமதானம்

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் 1800 உயிர்களைக் காவு கொண்ட கல்லடி, நாவலடி, விபுலானந்தா வித்தியாலயம் கம்பளை ஐ.தே.க நகர சபையின் தலைவர் சரத்காமினி ஹெட்டியாராச்சி தலைமையில் சிரமதானம் மூலம் கடந்த 3 நாட்களாக சீரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலை சேதத்திற்குள்ளானதோடு மாத்திரமின்றி, சுற்றிவர மதில்களும் சேதத்துக்குள்ளாகியிருந்தது. இந்நிலையிலேயே கம்பளை நகரசபை சுமார் 80 தொண்டர்களுடன் தமது சொந்தச் செலவில் மதில்களை நிர்மாணித்து புனரமைப்புச் செய்வதுடன் புதிதாக வர்ணங்களைப் பூசி வருகின்றனர். இன்னும் இரண்டு தினங்களில் வேலைகள் யாவும் முடிவுற்று அதிபரிடம் இப்பாட சாலையை கையளிக்க முடியுமென்றும் தலைவர் தெரிவித்தார்.

## பாலமுனை அலிகார் வித். ஐ.தே.க சிரமதானம்

(காத்தான்குடி நிருபர்)

நாவலடி கம்பளை பிரதேச சபையின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் உட்பட சுமார் 75 க்கும் மேற்பட்டோர் மண்முனைப் பற்று பிரதேச பிரிவுக்குட்பட்ட பாலமுனை அலிகார் வித்தியாலயத்தை கடந்த இரண்டு நாட்களாக சிரமதானம் மூலம் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐ.தே.க.யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரிலேயே இந்த வேலைத் திட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மேற்கொண்டு வருவதாகவும் பிரதேச சபையின் தலைவர் தெரிவித்தார்.

# கடற்றொழிலை மீள் புனரமைக்க அரச, அரச சார்பற்ற நிறுவனம் உதவி

(அக்கரைப்பற்று நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட சுனாமி பேரலையினால் அம்பாறை மாவட்ட கடற்றொழில் துறைக்கு ஏற்பட்டுள்ள பாரிய இழப்பை மீளக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் தயாராக இருப்பதற்காக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேன விஜயம் செய்தார்.

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் கல்முனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் கடற்றொழில் விபத்து முகாமைத்துவ நிலையங்களைத் திறந்து வைத்து பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர்

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள விபத்து முகாமைத்துவ நிலையங்களில் மீனவர் உயிரிழப்பு, உடமையிழப்பு போன்றவற்றை

**நீரியல் வளத்துறை அமைச்சர்**

உடன் வழங்குவதன் மூலம்தான் மீளக் கட்டியெழுப்பி மீன்பிடித்துறையை வழமை நிலைக்குக் கொண்டு வர முடியும் எனத் தெரிவித்தார். சேதமடைந்த மீனவர்களின் வீடுகளுக்குப் பதிலாக பொருத்தமான பாதுகாப்பான இடத்தில் மீனவர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை அந்தந்தப் பிரதேசத்தில் உருவாக்கி குடியமர்த்த உள்ளதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப், நீர்ப்பாசன காணி விவசாய பிரதி அமைச்சர் விமல்ரட்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், புவாக் முஸம்மில், வசந்த பியதிஸ்ஸ, கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் பியசேன, கல்முனைப் பிராந்திய கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரீ.ஜோஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சிகரம் கிராமத்துக்கு 11 கூடாரங்கள் திண்டாடுகின்றனர் மக்கள்

(காத்தான்குடி நிருபர்)

மண்முனைப் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிகரம் கிராமத்தில் 58 குடும்பங்களுக்கு 11 கூடாரங்களே வழங்கப்பட்டுள்ளதால் இங்கு இடம் பெயர்ந்துள்ள அகதியான மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள மக்கள் உடுத்த ஆடைகளுடனேயே வீடு வாசல்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் இழந்து இங்கும் கூடாரங்கள் போதிய அளவிற்கு இல்லாமையினால் பலத்த சிரமங்களையும், துன்பங்களையும் அனுபவித்து வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.



ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் டடாஓ சினோ (Tadao Chino) திருகோணமலைக்கு சனிக்கிழமை விஜயம் செய்தார். காலை 10.50 மணியளவில் திருகோணமலை ஜயசுமணராமய விகாரைக்குச் சென்று அங்குள்ள பாதிக்கப்பட்ட சிங்கள மக்களையும் பின்னர் அலஸ்தோட்டம் அகதிகள் முகாமிற்குச் சென்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும். ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்குச் சென்று முஸ்லிம் மக்களையும் பார்வையிட்டார். இவர்களுடன் வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா, நிக்கொட் மாகாணப் பணிப்பாளர் ஆகியோர் சென்றனர்.(எஸ்.எஸ்.குமார்)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# இலங்கை செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் துப்பரவுப் பணி

(எம்.யுவராஜ்)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட கல்லடி புதுமுகத்துவாரப் பகுதி நேற்று முதல் இலங்கைச் செஞ்சிலு வைச் சங்க மட்டக்களப்பு கிளை தொண்டர்களால் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களால் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேவேளை வாகரை, கிருமிச்சைப் பகுதியில் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு மூன் று வாரங்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களையும் வழங்கியுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்து நலன் புரி நிலையங்களிலும் சுமார் 150 வரையான இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் நேற்றுமுதல் சுகாதாரப் பணியில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு கிளைத் தலைவர் தா. வசந்தராஜா தெரிவித்தார்.

# சுனாமி வருகிறது எனக் கூறி மக்கள் விழுந்தடித்து ஓட்டம்

(சர்வேஸ்வரன்)

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், திருக்கோயில் பிரதேசங்களில் சுனாமி வருகிறது என சனிக்கிழமை இரவு மக்கள் பீதியடைந்து விழுந்தடித்து ஓடினர்.

இதனையடுத்து அம்பாறை மாவட்ட அரசியல்துறை போராளிகள் சிலர் கடற்கரை பகுதிக்கு சென்று நிலமைகளை அவதானித்து மக்களுக்கு தெரியப்படுத்தினர்.

இதேவேளை பொய் வதந்திகளையும், பிரசாரங்களையும் கேட்டு மக்கள் அச்சமடையத் தேவையில்லை எமது அரசியல்துறை போராளிகள் கடற்கரை பகுதிகளில் அவதானிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஏதாவது மாற்றங்களை அவதானிக்கப்படுமாயின் அதுபற்றி அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

# அம்பாறை மாவட்டத்திற்கு இரு மேலதிக அரச அதிபர்கள்.

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்திற்கு இரு தமிழ் பேசும் மேலதிக அரச அதிபர்கள் நியமிப்பதற்குக் கொள்கையளவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிருவாக முகாமைத்துவ மறு சீராக்கல் அமைச்சர் அமரஸ்ரீ தொடங்கொடவிடம் அகில இலங்கை அரச பொது ஊழியர் முன்னணித் தலைவர் எஸ். லோகநாதன் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தையடுத்துக் கரையோரப் பிரதேச பாதிப்புப் பிரதேசங்களுக்கான நிவாரணப் பணிகள் மேற்கொள்வதில் அம்பாறைக் கச்சேரி பலத்த அசௌகரியங்களையும் பாரபட்சங்களையும் காட்டிவருவதாக அவர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகத்திற்கான நிவாரணப் பணிகளை முஸ்லிம் அமைச்சர்கள் எம்.பிக்கள் முன்னின்று செய்வதால் பிரச்சினை பெரிதாக இல்லை. ஆனால் இதனால் தமிழ்ப் பிரதேசங்களுக்கான நிவாரணப் பணிகளில் தொய்வு நிலை காணப்படுவதாக அவர் எடுத்துக் கூறினார்.

எனவே, அரச அதிபருக்கு மேலதிகமாக தமிழ், முஸ்லிம் சமூகத்திலிருந்து இரு மேலதிக அரச அதிபர்களை நியமிக்க கோரியபோது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனேடியப் பிரதமரை கூட்டமைப்பு சந்திக்கிறது.

(தனஞ்ஷயன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கனேடிய பிரதமர் போல் மார்டின்னுக்குமிடையிலான சந்திப்பு இன்று பி.ப.2.00 மணியளவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் கூட்டமைப்பு சார்பாக தலைவர் இரா.சம்பந்தன் உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

# ஆழிப்பேரலையில் உயிரிழந்தோருக்கு ஆத்ம சாந்தி வேண்டி அஞ்சலி!

(எஸ்.சசி)

மட்டக்களப்பு திருமறைக் கலா மன்றத்தினர் சுனாமி பேரலையால் உயிர் இழந்த சகல மதத்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி எதிர்வரும் 26ம் திகதி மட்டு. காந்தி சதுக்கத்தில் பிற்பகல் 4.00 மணியளவில் விசேட அஞ்சலிக் கூட்டமும் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது.

இதில் சகல மதத் தலைவர்களும் கலந்து கொண்டு சுனாமி அனர்த்தத்தினால் உயிர் இழந்த மக்களுக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் வள்ளுவன் சுவாமிநாதன் தெரிவித்தார்.

# கிட்டு நினைவாக சிரமதானப் பணி

(எஸ்.சசி)

வங்கக் கடலில் வீரகாவியமான கேணல் கிட்டுவின் 12வது ஆண்டு நிறைவையொட்டி நேற்று குடும்பிமலைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் புகழன் தலைமையில் மகிழவெட்டுவான் கிராமத்தில் மாபெரும் சிரமதானம் நடைபெற்றது.

இச்சிரமதானத்தில் வீதிகளும், பாலங்களும் புனரமைக்கப்பட்டதோடு மகிழவெட்டுவான் பாடசாலையும் துப்பரவு செய்யப்பட்டது. இதில் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் பொதுமக்கள் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஆழிப்பேரலை...

டொலர் பெறுமதியானது. இராணுவ தளபதி சாந்த கோட்டேகொட தலைமையில் கடற்படை அதிகாரிகளின் பிரதிநிதி மொஹான் விஜயவிக்ரம, விமானப்பொறியியல் பிரிவின் இயக்குனர் லால் பெரேரா, தென்மராட்சிப் பிரிவுக்குப் பொறுப்பான 52வது கட்டளைப் பிரிவு அதிகாரி நிமால் ஜெயசூரிய, கடற்படைப்பொறியியல் பிரிவின இயக்குநர் டி..என்.தர்மவீர, கடற்படையின் மின் மற்றும் இலத்திரனியல் பிரிவு இயக்குநர் ஜே.சி.ஹெட்டிகம, காங்கேசன்துறையில் நிலைகொண்டுள்ள ஜெ.ஜென்.எஜ. உத்தர என்ற கடற்படைக் கப்பலின் கப்டன் கே.டி. நாணயக்கார ஆகியோருடன் படைத்துறை அமைச்சின் கணக்காளர் ஆகி யோரும் ஈரானுக்கு இந்த ஆயுத வேட் டைக்கு சென்றுள்ளனர்.

விமானப்படையின் குழுவினர் முன்னர் ஈரானுக்குச் சென்று ஆயுத விபரம் குறித்த பட்டியலைத்தயார் செய்திருந்தனர். தற்போது சென்றுள்ள குழுவினர் இனங்காணும் ஆயுத தளபாட விபரங்கள் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டு பின்னர் அவற்றைக்கொள்வனவு செய்வது தொடர்பான வேலைகள் இரு அரசுகளின் மட்டத்திலும் முன்னெடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

இதேபோன்றதொரு பாதுகாப்பு பரிவர்த்தனம் கடந்த மாதம் சீனாவுடனும் சிறிலங்கா அரசு செய்த கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கல்லடி...

இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவரது சடலம் நேற்றுக் காலை மட்டக்களப்பு பொலிசாரினால் மட். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்று பி.ப. 3.00 மணியளவில் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

### மன்னாரில்...

ற்பதைத் தடுக்கும் வகையில் கண்ணீர்ப் புகை குண்டுகளை வெடிக்கச் செய்து நிகழ்விடங்களிலிருந்து மக்களை கனரக ஆயுதங்களின் முனையால் வெளியேற்றியுள்ளனர். இந்த அநாகரிகச் செயல் குறித்து மன்னார் அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் கவனத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

அந்தக்கடிதத்தில் சிறீலங்கா படையினர் கனரக ஆயுத தளபாடங்களுடன் இன்றைய நிகழ்வு நடைபெற்ற இடங்களில் குவிக்கப்பட்டமை மக்களை உளரீதியாக பயமுறுத்தி அவர்களது உணர்வுகளை உரிமைகளை மதிக்காத செயலை இட்டு நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் எமது அதிருப்தியையும் தெரிவிக்கின்றோம்.

நிகழ்வு நடைபெற இருந்த இடங்களில் சிறீலங்கா படையினர் மக்களை அங்கிருந்து பலவந்தமாக விரட்டியதுடன் கண்ணீர் புகைக்குண்டுகளை வெடிக்க வைத்து மக்களை திகிலடையச் செய்து கலைத்துள்ளனர். இந்த அநாகரிகமான செயல். மக்கள் மீது திணிக்கப்பட்ட தமது போர் உபாயமாகும். இது ஒருபோர் நிறுத்த மீறலாகவே மக்கள் வெளிப்படுத்துகின்றனர். அமைதிக்கான சூழல் எமது மண்ணில் ஏற்பட வேண்டுமென மக்கள் காத்திருந்த கடந்த மூன்று வருடங்களுக்கு மேலான காலப்பகுதியில் இப்பிரதேசங்களில் மாவீரர் நினைவான எழுச்சி நாட்களில் தமிழீழ தேசிய கொடி ஏற்றப்பட்டு எழுச்சிகரமான நிகழ்வுகள் நடைபெற்று வந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மட்டும் இராணுவத்தினர் அடாவடித்தனங்களை செய்வதால் மக்களது உணர்வுகளை உரிமைகளை மதிக்காத செயலாக கருதுகின்றோம். இதனை தங்களின் கவனத்திற்கும் நடவடிக்கைக்கும் வெளிப்படுத்துகின்றோம் எனவும் அந்தக் கடிதத்தில் இனியவன் தெரிவித்துள்ளார்.

### அரசடித்தீவி...

அமைந்துள்ள லெப் கேணல் கிட்டுவின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவடிமுன்மாரிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் உதயராஜ், பிரதேசப் பொறுப்பாளர் இசைவிழி மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக இந்நிகழ்வு மிக எளிமையாக அமைதியாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

### வங்கக்...

காலை 9.00 மணியளவில் போராளி மிரேசு தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில்,

பொது ஈகைச் சுடரினை மட்டு அம்பாறை மாவட்ட மகளிர் தளபதி வசந்தா ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் துணைத் தளபதி பல்லவன் ஏற்றி வைத்தார்.

கேணல் கிட்டு அவர்களின் திருவுருவப் படத்துக்கான ஈகைச் சுடரினை தளபதி கலைமருதனும், சிறப்பு வைத்தியர் வேணியன் அவர்களும் ஏற்றி வைத்தனர். லெப் கேணல் குட்டிசிறி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மட்டு அம்பாறை மாவட்டத்தின் மருத்துவப் பொறுப்பாளர் ரவிமோகனும், மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் கீர்த்தனாவும் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கேணல் கிட்டு அவர்களின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை நிருவாக செயலகப் பொறுப்பாளர் கேந்திரன் அவர்கள் அணிவித்தார். லெப் கேணல் குட்டிசிறி அவர்களின் திருவுருவப் படத்துக்கான மலர்மாலையினை கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த பொறுப்பாளர் செல்வராசா அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து உறுதியுரை இடம் பெற்றது. பின்னர் இதுவரை காலம் தாயக மண்மீட்புப் போரில் வீரகாவியமான மாவீரர்களுக்கும், படுகொலை செய்யப்பட்ட பொது மக்களுக்கும், கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களுக்கும் அகவணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து மலரஞ்சலி நடைபெற்றவுடன் அரங்க நிகழ்வு இடம் பெற்றது.

அரங்க நிகழ்வில் தலைமையுரையினை போராளி மிரேசும், நினைவுரையினை மகளிர் தளபதி வசந்தாவும், சிறப்புரையினை மட்டு அம்பாறை கட்டளைப் பணியகத் தளபதி சுரேஸ் அவர்களும் நிகழ்த்தினர். தொடர்ந்து போராளிகளின் கலை நிகழ்வுகளுடன் 11.00 மணிக்கு நிகழ்வு நிறைவு பெற்றது.

உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு
T.Vipusanan Manpower (pvt) Ltd.
Badula Rd, Karadiyanaru Chenkaladi
Tel:071-2528248 H.phone: 0777-6668747
பாலசிங்கம் தாமரைவதனன்

மேற்படி எமது நிறுவனத்தின் ஊடாக U.A.E., Saudiarabia, Dubai (பிரிட்டிஷ் வேஷற் அன்ட்கோ), Oman, Doha-Qatar ரெலிகாம் போன்ற இடங்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக விண்ணப்பித்தவர்களுக்கு ''வீசா'' (Visa) கிடைக்கப்பெற்றுள்ளதால் எம்மூடாக விண்ணப்பித்த அனைவரும் எதிர்வரும் 17-01-2005 அன்று திங்கட்கிழமைக்கு முன் எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

18-01-2005 அன்று செவ்வாய்கிழமை கொழும்பு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் ஒப்பந்தம் (Agreement) கையொப்பமிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Agreement கையொப்பம் இடச்செல்ல வேண்டியவர்களுக்காக ''ராஜா ரவல்ஸ்'' பஸ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 17-01-2005 திங்கட்கிழமை பி.ப 8.00 மணிக்கு செங்கலடியிலிருந்து புறப்பட இருக்கின்றது.

### சர்வதேச...

முக்கியம் பெற்றிருந்தது.

இயற்கைப் பேரனர்த்தத்தால் எமது தாயகப் பிரதேசம் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. எங்கள் மக்களின் உடனடி மனிதாபிமான நிவாரணப் பணிகள், அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள்குடியேற்றப் பணிகள் போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியையும் ஆதரவையும் நேரடியாகக் கோரியிருந்தோம்.

அந்த வகையில் ஐ.நா அமைப்பினுடைய உயர்மட்டப் பிரதிநிதிகளும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளும் வருகை தந்து எங்களுடன் கலந்தாலோசிக்கின்றனர். என்னென்ன தேவைகள் உள்ளன, என்னென்ன வேலைகள் முன்னெடுக்கலாம் என்பது பற்றிய விடயங்களை வருகை தரும் பிரதிநிதிகளுடன் பரிமாறி வருகின்றோம். தொடர்ச்சியாக மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள், நிவாரணப் பணிகள், மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான வேலைத் திட்டங்களாகத் தான் இச்சந்திப்புக்கள் அமைந்துள்ளன என்றார்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 17.01.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது